விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 29 புதன்கிழமை (16.10.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 301

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## நான் எதிர்காலத்தைப் பற்றி கதைக்கிறேன் நீங்கள் காணாமல்போனோர் பற்றி கதைக்கிறீர்கள்

### சிரித்தபடி பத்திரிகையாளர்களிடம் கோத்தா எகத்தாள பதில்

(கொழும்பு)
"காணாமல்போனவர்கள் விடயத்தை பற்றி நீங்கள் கடந்த காலத்தை கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நான் இலங்கையின் எதிர்காலத்தை பற்றி திட்டமிட்டு பேசிக் கொண்டிருக்கிறேன்" என சிரித்தபடி எகத்தாளமாக பதிலளித்துள்ளார் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி 23

### நான் ஜனாதிபதியாக பதவியேற்றால்

# ஜெனிவா தீர்மானத்தை ஒருபோதும் ஏற்கேன்

### ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)
நான் ஜனாதிபதியாக பதவியேற்றால் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை 2015இல் ஏற்றுக் கொண்ட விடயங்களையும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அந்த ஆண்டு அறிக்கையையும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என அறிவித்துள்ளார் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

(23ஆம் பக்கம் பார்க்க)



மகிந்த தேசப்பிரியவுக்கு

## மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதம்

(கொழும்பு)
அனைத்து மக்களும் தேர்தலில் கலந்துகொண்டு, வாக்களிப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியிருக்கிறது.
அரசியலமைப்பின் 23

பிரித்தானியத் தூதுவர்

## கூட்டமைப்புடன் சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வந்திருக்கும் இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் நேற்றைய தினம் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் சந்தித்துப் பேசியுள்ளார்.
யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல விடுதியொன்றிலே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது. 23

## தே.ஆணைக்குழு ஆணையாளராக சமனை நியமிக்க சபை அனுமதி


23

ஐந்து கட்சிகளும் இணைந்தே

## தெற்குத் தலைமைகளுடன் பேசுவோம் – சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)
இப்போது பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று கட்சிகளும் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ் மக்கள் 23

## யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் நாளை திறப்பு

ஓடு பாதை, கட்டுப்பாட்டுக்கோபுரம் நேற்று பரீட்சிப்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இந்தியாவின் எயார் இன்டியா விமானம் தரையிறங்கியுள்ளது.
இந்தியு தொழிநுட்ப அதிகாரிகள் 23

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு

### பிரதமர் ரணிலுக்கு அழைப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
அரச நிறுவன ஊழல மோசடி விவகாரம் தொடர்பாக விசாரணை செய்யும் 23

குடும்பத் தகராறு காரணமாக

## மணியந்தோட்டத்தில் இளம் குடும்பஸ்தர் கோடரியால் அடித்துப் படுகொலை

(யாழ்ப்பாணம்)
குடும்பத் தகராறு காரணமாக இளம் குடும்பஸ்தர் கோடரியால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம், அரியாலை - மணியந்தோட்டம் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.
இச்சம்பவத்தில் மணியந்தோட்டம் 5ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த 23

## ஆதிக்கத்துக்கு உட்பட்ட கைப்பொம்மை ஜனாதிபதியாக இருக்கப் போவதில்லை

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)
ஒருபோதும் கைப்பொம்மை ஜனாதிபதியாக தான் இருக்கப் போவதில்லை என புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
தெரணியகல நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம 23

## கூட்டமைப்புடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த

(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 23

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

**2020 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல் (திருத்தம்)**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் 2020.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான 10.10.2019 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் ஏழாலை உப அலுவலகத்திற்குட்பட்ட ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை (தொடர் இலக்கம் 03) இற்கான அறிவித்தல் கீழ்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

| தொ இ | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| 1 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40500.00 | 250.00 |

**க.தர்ஷன் தவிசாளர் – வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.** (C-7930)


## தரம் 6 அனுமதி விண்ணப்பம்

2020ஆம் ஆண்டிற்கு தரம் 6ற்கான அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை பாடசாலையில் பெற்று 31.10.2019 றகு முன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**அதிபர்**
**யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை** (C-7929)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603 / 021 567 1532**

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆரம்பக் கல்வி ஆசிரியையான
திருமதி
**அ.ஜெனற்கிளசிற்றஸ்**
அவர்களின் அன்புக் கணவர்
அமரர்
**லூ.அன்ரன் விமலதாசன்**
அவர்கள் 14.10.2019 (திங்கட் கிழமை) இறைபதமடைந்தார். இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இவரது இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நல்லுறவுக் கழகம் - யா/புனித சாள்ஸ் ம.வி**
**பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**
(662)

**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்**
**பழைய புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்**

பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்டு தற்போது பாவிக்க முடியாத நிலையிலுள்ள புத்தகங்களை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்பும் நிறுவனங்கள் உரிய விண்ணப்பப் படிவத்தினை எமது அலுவலக நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி 30.10.2019ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**செ.சந்திரராஜா,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்,**
**செம்மணி வீதி, நல்லூர்.** (C-7932)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி
**ரஞ்சினிதேவி சந்திரகுமார்**
அவர்களின் அன்புத் தாயார்
அமரர்
**முருகுப்பிள்ளை சின்னம்மா**
(விவேகானந்த நகர், கிளிநொச்சி)



**மண்மகிழ்வு** 21 • 07 • 1950
**கண்நெகிழ்வு** 09 • 10 • 2019

அவர்களின் பிரிவால் துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**கல்விச்சமூகம் - கிளி/திருவையாறு மகாவித்தியாலயம்** (C-7933)

# மரண அறிவித்தல்

## மகேஸ்வரன் வாகீசன்

(A/L 2011, யா/சென்ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவனும், Design Engineer, 2G Energietechnik GMBH Benzstra Be 3/D - 48619 Heek)



நீதவான் வளவு, கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மன் Heek ஐ வதிவிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் வாகீசன் அவர்கள் கடந்த *(07.10.2019)* திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கமுத்து மயில்வாகனம் - முத்துப்பிள்ளை, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - இராசாம்பிகை ஆகியோரின் அன்புப் பேரனும் மகேஸ்வரன் (ராசா) - உதயகுமாரி தம்பதிகளின் பாசமிகு மகனும் விதுனன் (Director, KVM Quality Engineering (pvt) Ltd), சாருஷா (QA, NAVOTAR Software (pvt) Ltd), ஆகியோரின் அன்புச் சகோதரனும் முத்து மயில்வாகனம் - அம்பிகை (ஜேர்மனி), இரத்தினமுத்து மயில்வானம் - இந்திராணி (கனடா), Dr.மனோகரன் - அகிலினி (நோர்வே), மயூரகுமார் - செல்வரூபி (கொழும்பு) ஆகியோரின் பெறாமகனும் சுகுமார், காலஞ்சென்ற நந்தினி (கொழும்பு), காலஞ்சென்ற ஜெயக்குமார், விஜயகுமார் - தேசிங்கராணி(கட்டார்), இந்திரகுமார் - யோகேஸ்வரி (கொழும்பு), செல்வச்சந்திரன் - ஜெயப்பிரசாந்தி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் மருமகனும் மகிந்தன், அபிராமி, மதுரா, ஆதித்தன், மகிஷா, மித்திரன், மயூரி, தர்சனா, ஆதவன், ஆரணி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆஷா, அஜந்தன், விஜிராம், பவித்திரன், துஷியந்தன், றதிகன், யதுஷன், அஸ்வினி, அபிலாஷ், அத்மிகா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை *(17.10.2019)* வியாழக்கிழமை பிற்பகல் *2.00* மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நீதவான் வளவு, கோப்பாய் தெற்கு.** (661)
**தகவல் : தந்தை மகேஸ்வரன் (ராசா)**
**தொ.பே : 077 615 1266 / 077 722 7615**

**யாழ்.மத்திய கல்லூரி**
**JCC EDU CARE TRUST**

## விசேட புலமைப்பரிசில் திட்டம் - 2019
## தரம் 6 மாணவர் அனுமதி - 2020

மத்தியின் "கல்விக் காப்பு அறக்கட்டளை" ஆனது எமது பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் ஆளுமை வளர்ச்சிக்காகப் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றினை வழங்க உள்ளது.

இத்திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் (ஆண்கள்) விண்ணப்பிக்க முடியும்.

அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற புலமைப்பரிசில் திட்டம் கிடைக்காத மாணவர்களும் இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை :**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பெறப்பட்ட அல்லது தரம் 06 அனுமதிக்கான பொது விண்ணப்பப்படிவம் ஒன்றினை பூரணமாக நிரப்பி விண்ணப்பப்படிவம் மற்றும் கடித உறை என்பவற்றின் இடது மேல் மூலையில் "புலமைப்பரிசில் திட்டம் - 2019" எனக்குறிப்பிட்டு 30.11.2019ற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்புதல் வேண்டும்.

**முகவரி : அதிபர், யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(656)

# தனிப்பட்ட நலன்களுக்காக சு.கவை காட்டிக்கொடுத்து விட்டார் மைத்திரி

## சந்திரிகா பகிரங்கக் குற்றச்சாட்டு

## கொலைகாரர்கள், ஊழல்-மோசடியாளர்களின் அநீதி ஆட்சிக்கு சுதந்திரக்கட்சி அனுமதிக்காது



(கொழும்பு)

**தனது தனிப்பட்ட நலன்களுக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் காட்டிக் கொடுத்து விட்டார் என்று அக் கட்சியின் முன்னாள் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க குற்றம்சாட்டினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களுக்கு அனுப்பியுள்ள பகிரங்க கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.**

“நாட்டின் ஜனாதிபதி உள்ளிட்ட சந்தர்ப்பவாதத் தலைவர்கள், கட்சியின் 95 வீதமான அமைப்பாளர்களின் கருத்துக்களை நிராகரித்து, தனிப்பட்ட இலாபத்துக்காக சதிகாரர்களுடன் ஒரு உடன்பாட்டுக்குச் சென்றுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜனநாயகத்தை மதித்து- ஆதரித்த ஒரு கட்சியாக இருந்து வருகிறது.

எங்கள் கட்சி கொலைகாரர்கள், மோசடி செய்பவர்கள் மற்றும் ஊழல்வாதிகளுக்கு இடமளிக்கவில்லை.

மீண்டும் அநீதி ஆட்சி செய்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அனுமதிக்காது.

ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சி வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தாமல் போனது வரலாற்றில் இதுவே முதன்முறை.

நாங்கள் ஜனாதிபதிகளை, பிரதமர்களை உருவாக்கியிருக்கின்றோம். சுதந்திரக் கட்சிக்கு நேர்ந்த கதியைப் பார்த்து என் இதயம் அழுகிறது.

இத்தகைய உடன்பாடுகள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழிக்க வழிவகுக்கும். சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் அனைவரும், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். இந்தக் கட்சியை அழிக்க எடுக்கும் முயற்சிகளுக்கு எதிராக நாம் எழ வேண்டும்.

கட்சியையும் அதன் கொள்கைகளையும் பாதுகாப்பதற்கான போராட்டத்தைத் தொடங்கியவர்களுக்கு எனது உறுதியான ஆதரவை வழங்குகின்றேன்” என்றும் சந்திரிகா மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழர்களின் கைது நியாயமானது

## மலேசியப் பிரதமர் திட்டவட்டம்


(கோலாலம்பூர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் மலேசியாவில் கைதான 12 பேரும் பொலிஸாரின் நியாயமான காரணங்களின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டதாக அந்நாட்டுப் பிரதமர் மஹதீர் மொஹமட் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

“தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை மீள உருவாக்க முயற்சித்ததாக தெரிவித்து, அவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு மலேசியாவில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்களின் தொலைபேசி, அவர்கள் தங்கியிருந்த இடம் என்பவற்றை மலேசிய பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய தகவல்களுடன், சுவரொட்டிகள், அச்சுப்படங்கள் உள்ளிட்ட பொருட்கள் மீட்கப்பட்டன.



இதனடிப்படையிலேயே அவர்களை தாம் கைது செய்ததாக பொலிஸார் விளக்கமளித்தனர். அவை ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களே” எனப் பிரதமர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (இ-7)

# தாயையும் மகளையும் கொலை செய்தவருக்கு மரண தண்டனை!

(கொழும்பு)

**பெண்ணொருவரையும் அவரது மகளையும் கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட நபருக்கு உயர் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. மேற்படி நபர் கடந்த 2012 ஆம் ஆண்டு இரத்தினபுரியில் கொட்டகெத்தன பகுதியில் தாயொருவரையும், அவரது 17 வயதுடைய மகளையும் கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)**

# பங்களாதேஷ் அமைப்பு தமிழ்நாட்டில் ஆயுதப்பயிற்சி பௌத்த விகாரைகளைத் தகர்ப்பதற்கு முயற்சி!

## இந்திய தேசிய விசாரணைப் பணியகத்தலைவர் அதிர்ச்சித் தகவல்

(சென்னை)

பங்களாதேஷை சேர்ந்த பயங்கரவாத அமைப்பொன்று தமிழ்நாட்டின் கிருஸ்ணகிரியில் ஆயுதப் பயிற்சி மற்றும் தாக்குதல் ஒத்திகைகளில் ஈடுபட்டது என இந்தியாவின் தேசிய விசாரணை பணியகத்தின் தலைவர் வைசிமோடி எச்சரிக்கை விடுத்தார்.

குடியேற்றவாசிகள் என்ற போர்வையில் இந்த அமைப்பினர் இந்தியாவின் தென்மாநிலங்கள் வரை ஊடுருவியதாக சுட்டிக்காட்டினார். மேலும் அவர் தெரிவித்ததாவது.

2014 முதல் 2018 வரை இந்த அமைப்பு பெங்களூரில் பல மறைவிடங்களை உருவாக்க முயன்றதுடன் தென்னிந்தியாவில் கால்பதிக்க முயன்றது என்றும் தமிழ்நாட்டின் கிருஸ்ணகிரியில் இந்த அமைப்பினர் ரொக்கெட் லோஞ்சர் வகை ஆயுதங்களை பரிசோதனை செய்து பார்த்தனர் என்றும் மியன்மாரின் ரொகிங்யா முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு பழிவாங்குவதற்காக பங்களாதேஷ் அமைப்பினர் இந்தியாவில் பௌத்த விகாரைகளைத் தகர்க்கத் திட்டமிட்டனர் என்றும் சுட்டிக்காட்டினார். (ஜ)

# இ.தொ.காவின் ஆதரவால் 2 இலட்சம் வாக்குகள் உறுதி

## அமரவீர கணிப்பு

(கொழும்பு)

ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவின் மூலம் மேலும் 2 இலட்சம் வாக்குகள் உறுதியாகியுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அத்துடன் ஓரிரு தினங்களில் மேலும் 20 கட்சிகள் எம்முடன் இணையவுள்ளன. எனவே கோத்தபாய ராஜபக்ஷ நிச்சயம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என்றும் அமரவீர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலுக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எவ்வித பிரசாரங்களையும் முன்னெடுக்காத போதிலும் எம்மீது நம்பிக்கை வைத்து 13 வீத மக்கள் வாக்களித்தனர்.

எனவே பிரசார நடவடிக்கைகளுடன் ஜனாதிபதித் தேர்தலில் சு.க. ஆதரவாளர்களின் வாக்குகளுடன் கோத்தபாய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# இருபது-20 உலகக் கிண்ணத்தை

## ஒவ்வொரு வருடமும் நடத்த ஐ.சி.சி. திட்டம்



ஒவ்வொரு வருடமும் இருபது-20 உலகக்கிண்ணத் தொடரை நடத்தத் திட்டமிட்டுள்ளது சர்வ தேச கிரிக்கெட் சபை.

சர்வதேச கிரிக்கெட் சபையின் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் துபாயில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு முடிவுகள் தொடர்பில் பரிசீலிக்கப் பட்டுள்ளது.

இதன்படி இருபது-20 உலகக் கிண்ணத் தொடரை ஒவ்வொரு வருடமும் நடத்துவதற்கு

அனுமதி கோரியுள்ளது ஐ.சி.சி.

இதற்கு பல்வேறு கிரிக்கெட் சபைகளும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. (ம)

# உலக கிண்ண இறுதிப்போட்டி எதிரொலி

# முடிவு கிடைக்கும் வரை சுப்பர் ஓவர் நடைபெறும்

## ஐ.சி.சி. அறிவிப்பு



ஐ.சி.சி சார்பில் நடக்கும் அனைத்துப் போட்டிகளின் ஆட்டம் சமனில் முடிந்தால், முடிவு கிடைக்கும் வரை சுப்பர் ஓவர் மட்டுமே பயன்படுத்தப் படும். பவுண்டரிகளின் எண்ணிக்கை கணக்கில் கொள்ளப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் அண்மையில் நடை பெற்ற உலகக் கிண்ண்த் தொடரின் இறுதியாட்டம் சமநிலையில் முடிந்தது. சுப்பர் பந்துப் பரிமாற்றமும் சமநிலை யில் முடிந்ததால் பவுண்டரிகளின் எண ணிக்கை அடிப்படையில் இங்கிலாந்து சம்பியனானது.

இது பெரும் சர்ச்சையான நிலை யில், பவுண்டரிகளின் எண் ணிக்கை இனி கணக்கில் கொள்ளப்படாது என்று ஐ.சி.சி அறிவித்துள்ளது. (ம)

## பெறுகை அறிவித்தல்

### வலிகாமம் தெற்குபிரதேசசபை, சுன்னாகம் 2019

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016(ii) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. தேவையானதகைமைகள் பெறுகைஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களைபெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கிலமொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேசசபையில 16.10..2019 தொடக்கம் 30.10.2019 ஆம் திகதி வரை அலுவலகநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணிவரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.3000/- (**NBT,VAT** தவிர்ந்த )செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 31.10.2019 ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 24.10.2019 ஆம திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்

07. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு ரூபா | கேள்விப் பிணை செல்லுபடியா கும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | யாமா தலைவாசல் வீதித் திருத்தம் | 1.034 | 2 மாதம் | C9 & C8 | 10500.00 | 16.01.2020 |
| 2 | சுன்னாகம் மீன் சந்தை கழிவுநீர் தொட்டிக்கான மூடி அமைத்தல் & சுன்னாகம் உபஅலுவலக கூரைதிருத்தம் | 0.256 | 2 மாதம் | C9 & C8 | 3000.00 | 16.01.2020 |
| 3 | தபாலக புனரமைப்பு மிகுதிவேலை | 0.175 | 2 மாதம் | C9 & C8 | 2000.00 | 16.01.2020 |
| 4 | சுன்னாகம் நூலக வேலைகள் & Supplying &Fixing iron grill at Peoples Bank Building at Chunnakam | 0.844 | 2 மாதம் | C9 & C8 | 9000.00 | 16.01.2020 |
| 5 | Supply of Executive Chair high back, Visitor chair Hybrid With Out Arms, Executive chair Low Back, , Display cupboard ,Computer table & Study desk | 0.616 | 1 மாதம் | தகுதி வாய்ந்த நிறுவனத்தினர் | 7000.00 | 16.01.2020 |
| 6 | Supply and installing Lap top computer | 0.1 | 1 மாதம் | | 1500.00 | 16.01.2020 |
| 7 | Supply and installing laser colour printer | 0.1 | 1 மாதம் | | 1500.00 | 16.01.2020 |
| 8 | Supply and installing computer | 0.84 | 1 மாதம் | | 8500.00 | 16.01.2020 |
| 9 | Construction of Boundary Wall Compost yard | 5.88 | 4 மாதம் | C7 & C6 | 60,000.00 | 13.02.2020 |

*க.தர்ஷன்*
*தவிசாளர்,*
*பிரதேசசபை பெறுகைக்குழு,*
*வலிகாமம் தெற்கு பிரதேசசபை,*
*சுன்னாகம்.*

*(C-7931)*

# மீண்டும் சம்பியன்ஸ் லீக்

சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் தொடர் மீண்டும் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது சர்வ தேச கிரிக்கெட் சபை.

ஐ.சி.சியின் இந்த ஆண் டுக்கான பொதுக்கூட்டம் துபாயில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத் திலேயே மேற்படி அறிவிப்பை விடுத்துள்ளது ஐ.சி.சி.

எதிர்வரும் 2030ஆம் ஆண்டில் இருந்து சம்பிய ன்ஸ் லீக் மீண்டும் நடத்தப் படும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட் டுச் சபை இதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இருதரப்புத் தொடர்களால்தான் இந்திய கிரிக்கெட்டுக்கு பெரும் இலாபம் வருகிறது. மீண்டும் சம் பியன்ஸ் லீக் வந்தால் அதன் இலா பம் வீழ்ச்சியடையும் என்பதால் தான் இந்தியக் கிரிக்கெட் எதிர்த் துள்ளது. (ம)

**ஐ.சி.சி. உலக கிண்ணத்தை**

# மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடத்தத் திட்டம்

ஐ.சி.சி உலகக்கிண்ணத் தொடரை மூன்று ஆண்டு களுக்கு ஒரு தடவை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

துபாயில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் தனது முடிவை அறிவித்துள்ளது


சர்வதேச கிரிக்கெட் சபை. எனினும் எந்த வருடத்தில் இருந்து இந்த நடைமுறை என்று தெரிவிக்கப்படவில்லை.

சிம்பாப்வே, பங்களாதேஷ், இலங்கை போன்ற கிரிக்கெட் சபை கள் இதற்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. (ம)

**நான் கச்சிதமான சகலதுறை வீரர்**

# வாய்ப்பு கிடைத்தால் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவேன்

**ஜடேயா தெரிவிப்பு**



நான் கச்சிதமான சகலதுறை வீரர். எந்த வாய்ப்புக் கிடைத்தாலும் அணிக் காக சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்து வேன் என்று தெரிவித்துள்ளார் இந்திய வீரர் ஜடேயா.

இது குறித்த ஜடேயா கூறியதாவது: "நான் என்னை கச்சிதமான சகலதுறை வீரராகப்பார்க்கிறேன். என்னால் எந்த வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அது துடுப்பாட்டமா அல்லது பந்து வீச்சா என்பது ஒரு விடயமே அல்ல.

பந்து வீசினாலும், துடுப்பெடுத்தாடினாலும் என்னுடைய பங் களிப்பை கொடுப்பது அவசியம். நான் சிறந்த வாய்ப்பை பெற்றுக் கொண் டிருக்கிறேன் என என்னால் உறுதியாக கூற இயலும் என்றார். (ம)



வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தீர்த்தத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது. (படங்கள்:- மகாலிங்கம்)

### மட்டக்களப்பில் மட்டும்

## கோத்தாவுக்கு ஆதரவு தெரிவித்து 101 தேர்தல் பிரசார நிலையங்கள்



(ஏறாவூர்)

மட்டக்களப்பில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாயவுக்கு ஆதரவு தெரிவித்து, 101 தேர்தல் பிரசார நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.

இதில் முதலாவது தேர்தல் பிரசார நிலையம் மட்டக்களப்பு-கல்லடி, உப்போடை பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தலைமையில் மட்டக்களப்பு, வாவிக்கரை தலைமைச் செயலகத்தில் குறித்த பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பிரதித்தலைவர் நா.திரவியம் (ஜெயம்), தவிசாளர் சோபா ஜெயரஞ்சித், மகளிர் அணித் தலைவி செல்வி மனோகர், கட்சியின் பொருளாளர் ஆ.தேவராஜ் உட்பட மத்திய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடையச் செய்வதற்கும் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பதற்கும் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் 101 தேர்தல் பிரசார நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு- வாவிக்கரை வீதியிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைமைச்செயலகம் மற்றும் வாகரை, வாழைச்சேனை, கல்குடா, செங்கலடி, மட்டக்களப்பு நகரம், கல்லடி, கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி, வவுணதீவு, ஆரையம்பதி போன்ற பல இடங்களில் இவ்வாறு தேர்தல் பிரசார அலுவலகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன. (இ-7)

# ஹிஸ்புல்லாவிற்கு வழங்கும் வாக்குகள் இன மோதலை தோற்றுவிக்கும் சக்திகள் ஆட்சிக்குவரக் காரணமாக அமையும்

## முஜிபுர் முன்கூட்டியே எச்சரிக்கை

(கொழும்பு)

**ஹிஸ்புல்லாவிற்கு வழங்கும் வாக்குகள் இன மோதல்களையும் தேவையற்ற பிரச்சினைகளையும் ஏற்படுத்தும் சக்திகள் மீண்டும் ஆட்சிக்குவரக் காரணமாக அமையும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எச்சரித்தார்.**




நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் ஹிஸ்புல்லாவிற்கு எதிராக உண்ணாவிரதம் இருந்த ரத்ன தேரர், அவருக்கு எதிராகக் குரல் கொடுத்த கம்மன்பில, விமல் வீரவன்ச போன்றோர் இன்று ஒரு தரப்பிலேயே இருக்கின்றனர். இவர்களுடன் தான் ஹிஸ்புல்லாவும் இணைந்துள்ளார். இனத்தால் வேறுபட்டாலும் இனவாதிகள் ஒரே இடத்தில் கூடியுள்ளனர்.

கடந்த ஒரு வருட காலமாக இனங்களுக்கிடையில் முறுகல் ஏற்படக் காரணமாக இருந்தவர்கள்தான் இன்று கோத்தபாய ராஜபக்ஷவின் வெற்றிக்காக இணைந்துள்ளனர்.

இவர்களின் ஆட்சி மீண்டும் வந்தால் இனநல்லிணக்கம், மக்களின் சுதந்திரம் அனைத்தும் பாதிக்கப்படும். இனங்களுக்கிடையில் குரோதத்தை வளர்த்து அரசியல் இலாபம் பெறவே இவர்கள் முயற்சிக்கின்றார்கள் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் நடவடிக்கைப் பிரிவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## 15 வீடுகள் கையளிப்பு



(கரணவாய்)

கரவெட்டி கிழக்கு காட்டுப் பகுதியில் அமைக்கப்பட்ட 15 வீடுகளை மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி பயனாளிகளிடம் கையளித்தார்.


கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வீடுகளை வைபவ ரீதியாகத் திறந்து வைத்து பயனாளிகளிடம் கையளித்தார்.

மேற்படி பகுதியில் மீள் குடியேற்ற அமைச்சின் நிதியிலிருந்து 15 வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன. தலா 15 இலட்சம் ரூபாய் பெறுமதியில் அமைக்கப்பட்ட வீடுகளே இவ்வாறு கையளிக்கப்பட்டன. (இ-60)

## தீபாவளி முற்பணத்தை அரசு வழங்க வேண்டும்

### மகிந்த கோரிக்கை

(கொழும்பு)



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை ஏற்படுத்துவதாகக் கூறி ஏமாற்றிய அரசாங்கம் குறைந்த பட்சம் தீபாவளி முற்பணத்தையாவது வழங்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஆதரவு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குக் கிடைத்த பின்னர் அக்கட்சியின் பிரதிநிதிகள் விடுத்த வேண்டுகோளையடுத்தே இந்தக் கோரிக்கையை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ விடுத்ததாக அவரது அலுவலகம் தெரிவித்தது.

தொழிலாளருக்கு சம்பள அதிகரிப்பு விடயத்தில் அரசாங்கம் ஏமாற்றி இழுத்தடிப்பு செய்தது. 50 ரூபாய் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படுமெனக் கூறி அதையும் செய்யவில்லை.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் வானளாவ அதிகரித்துள்ள நிலையில் தீபாவளி முற்பணத்தையாவது அரசு வழங்க வேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் மகிந்த வலியுறுத்தியுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது. (இ-7)

### நீரில் மிதந்த நிலையில்

## கொழும்பு துறைமுகத்தில் சடலம் மீட்பு!

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நுழைவாயிலில் நீரில் மிதந்து கொண்டிருந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டது. மேற்கு கடற்படை கட்டளை, அணியினர் நேற்றுக்காலை கொழும்பு துறைமுக நுழைவாயிலில் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் போதே, நீரில் மிதந்து கொண்டிருந்த சிதைந்த நிலையில் சடலத்தை மீட்டனர்.

அத்தோடு மீட்கப்பட்ட சடலத்தை உடனடியாக கரைக்கு கொண்டு வந்த நிலையில் மேலதிக நடவடிக்கைகளுக்காக கொழும்பு துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (இ-7)

# டெங்கு நுளம்பு பெருகும் வகையில்

# பராமரிப்பின்றி கைவிடப்பட்ட காணிகளை உரிமையாளர்கள் துப்புரவு செய்ய வேண்டும்

## இல்லையேல் சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த 7 ஆம் திகதி டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக் கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலக அரச அதிபர் அலுவலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில், யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள், பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாநகர சபை ஆணையாளர், யாழ். மாவட்ட பிரதேச சபை தவிசாளர்கள்/செயலாளர்கள் மற்றும் பிரதேச வைத்திய அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள், ஏனைய திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் அடுத்துவரும் காலப்பகுதி மழை காலமாகையால்டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அந்த வகையில் பொதுமக்கள் தங்கள் வீட்டுச் சூழல் மற்றும் பொது இடங்களில் டெங்கு நுளம்பு பெருகாத வகையில் துப்புரவாக வைத்திருத்தல் வேண்டும். டெங்கு நுளம்பு பெருகுவதற்கான சாத்தியப்பாடுகள் கூடுதலாகக் காணப்படும் பகுதிக்குரிய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பு பெருகும் வகையில் பராமரிப்பின்றி கைவிடப்பட்ட காணிகளை காணி உரிமையாளர்கள் துப்புரவுப் பணிகளைச் செய்ய வேண்டும் இல்லையேல் பிரதேச சபையால் முன்னறிவித்தல் வழங்கப்பட்டு காணி உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுக்கப்படுமென இக் கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டது என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் அறிவித்தார். (இ-5)

# எழுதாரகை படகு கையளிப்பு







எழுதாரகை படகு வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதியால் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி.மஞ்சுளாதேவி சதீஸன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

# உங்கள் ஜென்ம நட்சத்திரமும் துல்லியமான பலன்களும்

## மிருகசீரிடம் நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

### அதிர்ஷ்ட சோதிடம்

மிருகசீரிடம் 1-2 ஆம் பாதத்தில் பிறந்தவர்களின் இராசி ரிஷபம் ஆகும். மிருக சீரிடம் 3-4 ஆம் பாதத்தில் பிறந்தவர்களின் இராசி மிதுனம் ஆகும். மிருக சீரிட நட்சத்திரத்தின் அதிபதி- செவ்வாய் ஆவார். அதன் சின்னம்-சாரைப் பாம்பு ஆகும். ரிஷப இராசியின் அதிபதி - சுக்கிரன் ஆவார். அதன் சின்னம் காளை மாடு ஆகும்.

எனவே மிருக சீரிடம் 1-2 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் ரொம்ப சுத்தமாகவும், அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் இருப்பார்கள். சொகுசாக, ஆடம்பரமாக வாழ வேண்டும் என்பது இவர்களது இலட்சியமாக இருக்கும். கொஞ்சம் முன்கோபமும் பிடிவாதமும் உண்டு. தன் இஷ்டம் போல் முடிவெடுக்கக் கூடிய சுபாவமும் இவர்களிடம் உண்டு. கொஞ்சம் கர்வமும். திமிரும் இவர்களிடம் உண்டு. பெண் மோகம் உடையவர்கள்.அநேக பெண்கள் இவர்களிடம் நட்புடன் பழக நேரிடும். தாய்ப் பாசம் தந்தைப் பாசம் உடையவர்கள் கல்வியில் கெட்டிக்காரர்களாகத் திகழ்வர். இரும்பு, மரம், எண் ணெய் சம்பந்த மான தொழில் செய்தோ அல்லது உத்தியோகம் பார்த்தோ இவர்கள் முன்னுக்கு வர இடமுண்டு. சிலர் அழகு ஆடம்பரமான தொழில் செய்தும் முன்னுக்கு வரக்கூடும். இவர்களது இல் வாழ்க்கை ஓரளவு சந்தோசமாக இருக்கும். குழந்தைப் பாசம் உடையவர்கள். எதிரிகளை வெல்லும் ஆற்றல் உடையவர்கள். வெளிநாடு சென்று வேலை பார்க்கக் கூடிய யோகமும் இவர்களுக்கு வரக் கூடும். சிலர் சங்கீதம், நாட்டியம், சினிமா போன்ற கலை களில் கெட்டிக் காரர்களாக இருப் பார்கள் எனலாம்.

மிருகசீரிடம் 3-4 ஆம் பாதத்தில் பிறந்தவர்களின் இராசி மிதுனம் ஆகும். இதன் அதிபதி புதன் ஆவார். இதன் சின்னம் இரட்டையர்கள் ஆகும். எனவே இவர்கள் நல்ல புத்திசாலிகளாகவும் கல்வியில் கெட்டிக்காரர்களாகவும் இருப்பார்கள். ஒரு வக்கீல் போல் வாதம் புரியக் கூடிய ஆற்றலும் இவர்களிடம் உண்டு. கொஞ்சம் முன்கோபமும் பிடிவாதமும் உண்டு. மீடியம் கலர் உடையவர்கள். ஓரளவு அழகாக இருப்பார்கள். தரகு, ஏஜென்ஸி, இனிப்பு, மளிகை வியாபாரம், ஆசிரியர் வேலை, கம்பியூட்டர், தங்கம், clerk சம்பந்தமான தொழில் விடயத்தில் ரொம்ப நேர்மையாக இருப்பார்கள். தாய்ப்பாசமுடையவர்கள். தந்தை பாசம் சுமாராக இருக்கும். இல் வாழ்வில் அடிக்கடி கணவன்-மனைவிக்குள் சிறு சிறு சண்டை சச்சரவுகள் வந்து விலக இடமுண்டு. புத்திர விருத்தி உடையவர்கள். பெரும்பாலும் இவர்களுக்கு சுரம், தலைவலி, அடிவயிறுக் கோளாறு போன்ற நோய்கள் வந்து விலக இடமுண்டு.

# குருநகரில் வீதிப் புனரமைப்பு



(குருநகர்)

குருநகர் மத்திய மேற்கு வீதி புனரமைப்பு செய்யப்படுகிறது. குருநகர் மீன் வாடிக்கு செல்லும் குறித்த வீதி மிகவும் ஒடுங்கிய நிலையில் நீண்ட காலமாக புனரமைக்கப்படாது காணப்பட்ட நிலையில் தற்போது அகலமாக்கப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்றவாறு யாழ். மாநகர சபையால் புனரமைக்கப்பட்டு வருகிறது. (இ-2-106)

# இராசி பலன்

**மீனம்:** நிதானத்துடன் நடந்து முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**மேடம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் உங்கள் தகுதியை உயர்த்தும், போசன சுகமுண்டு, கனவு பலிதமுண்டு, கௌரவமான நாள்.

**இடபம்:** எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், உடல் நலனில் கவனம் செலுத்தும் நிலை ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

**மிதுனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் கூடும் நாள்.

**கும்பம்:** காரிய அனுகூலமுண்டு, தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், உறவினர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்:** தொழிலை விருத்தி செய்ய எடுத்த முயற்சிகள் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு, ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், பயணங்கள் எளிதில் கைகூடும்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | சந் | | ராகு |
| | | | |
| | | | |
| சனி, கேது | குரு | சுக், புத | சூரி, செவ் |

சந்திராஷ்டமம்
சுவாதி, விசாகம்

16.10.2019
புரட்டாதி 29, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திருதியை முழுவதும்
பரணி பிற்பகல் 2.47 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
கார்த்திகை விரதம், சித்தாமிர்தம்.

வளவன்

**தனுசு:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் நலனில் ஆர்வம் கூடும், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** பகைவர்கள் மனம் மாறுவர், முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் கிடைக்கும் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**துலாம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி:** உஷ்ண சம்பந்தமான சோகபயமுண்டு, எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம், எதிர்பாராத வகையில் சிலருடன் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

# 80 ஆவது பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்





## சங்கீதபூஷணம், கலாபூஷணம்
## திரு.சுப்பையா கணபதிப்பிள்ளை
### (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீதம்)

ஈழத்தின் முதுபெரும் சங்கீத வித்துவான் இன்று (16.10.2019) தனது எண்பதாவது அகவையெய்துவது குறித்து அவரது கலைப் பயணத்தினை நன்றியுணர்வுடன் நினைவுகூருவதோடு எல்லாம் வல்ல பொன்னாலை வரதராஜப் பெருமாள் அருள்பாலிக்க பல்லாண்டு காலம் நல் ஆரோக்கியத்துடன் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

குடும்பத்தினர்.

(சி-7926)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4 ஆம் பாதம்<br>கி.பா:10 செவ் 12 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:A/L தச்சுப்பட்டறை வேலை (தனியார்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10156 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3 ஆம் பாதம்<br>கி.பா: 10 சூரி.செவ் 9 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (பிரான்ஸ், சுவிஸ், கனடா, லண்டன்)<br>தொ.இ: G/6287 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1 ஆம் பாதம்<br>கி.பா:7 ½<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: தச்சுப்பட்டறை<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/10157 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5’6"<br>கி.பா: 39 சூரி.செவ் 3 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:சொந்தக்கடை வியாபாரம் தனியார் தொழில் விவசாயம்<br>தொ.இ: G/6303 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2 ஆம் பாதம்<br>கி.பா:16 ¾<br>தகைமை/தொழில்: கிறசர் (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10158 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:மூலம் 4 ஆம் பாதம்<br>கி.பா:38 செவ்.8 இல்<br>தகைமை/தொழில்:Bsc Bio Science Jaffna ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/6320 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3 ஆம் பாதம்<br>கி.பா:12½<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில் ஊடக பிரதம ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/10059 | பிறப்பு: 1981இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா:12 ¾<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: Bsc, ACMA (CIMA) Reading M.B.A ERP (தனியார்)<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர்<br>தொ.இ: G/6324 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# காலணிகள் உற்பத்தி பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

சங்கானை அந்திரான் தோல், இறப்பர் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில், காலணி உற்பத்தி பயிற்சிப்பட்டறை நாளை 17 ஆம் திகதி ஆரம்பமாகி 12 நாட்கள் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறை காலை 8.45 மணிமுதல் மாலை 4.45 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் இருபாலாரும் பங்குபற்ற முடியும். பங்கு பற்றுபவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. (இ-5-104)

## அறிவித்தல்

**ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை**
**தரம் -6 அனுமதி (2020)**

எமது கல்லூரியில் தரம் -6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் 16.10.2019 தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. விண்ணப்ப முடிவுத் திகதி 01.11.2019.
**விண்ணப்பங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

(சி-7927) அதிபர்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-7909)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்.








சீரடி சாயியைப் போற்றி அமைந்துள்ள பாடல்கள் அடங்கிய "மடத்தார்பதி வாழ் மன்னவனே" எனும் இசைப்பேழை கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது. ஈழத்து சீரடி ஆலயம் என அழைக்கப்படும் நல்லூர் நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடி சாய் மந்தீரில் இடம்பெற்ற இந்த வெளியீட்டு விழாவில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இறுவெட்டை வெளியீடு செய்து வைத்தார். இந் நிகழ்வில் சின்மயாமிஷன் சுவாமி சிதாகாசானந்தா, யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன், வலம்புரிப் பத்திரிகை ஆசிரியர் ந.விஜயசுந்தரம் உட்பட பெருமளவான சீரடி சாய் பக்தர்களும் கலந்து கொண்டனர். ஈழத்துக் கவிஞர் வேலணையூர் பா. சசிகுமாரின் பாடல் வரிகளுக்கு, தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளர் அக்னி கணேஸ் இசையமைத்துள்ள அதேவேளை ஐயப்பதாசன், பிரபாகர், ராகுல், தீபிகா, பவன், அபர்ணா, சந்திரஜோதி ஆகியோர் பாடல்களுக்குக் குரல் கொடுத்துள்ளனர். (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# இறுதிச் சுற்றுக்கு வரப்போவது இருவர் தான்



# சுதந்திரம், ஜனநாயகம் தொடர சஜித்திற்கு வாக்களிக்க வேண்டும்

## கவலை, துன்பம், சர்வாதிகாரம் மீண்டும் வர வேண்டுமென்றால் இரண்டாம் வேட்பாளருக்கு வாக்களியுங்கள் - மனோ பரப்புரை

(இரத்தினபுரி)

ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் இடம்பெற்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் அதன்மூலம் திறைசேரிக்கும் மேலதிக செலவை ஏற்படுத்தி இருந்தாலும் இறுதிச் சுற்றுக்கு வரப்போவது இரண்டு பேர்தான்.

அந்த இரண்டு இறுதிச்சுற்று வேட்பாளர்களில் முதலாமவர் சஜித் பிரேமதாஸ ஆவார். அந்த இரண்டு இறுதிச்சுற்று வேட்பாளர்களில் சஜித்தே அனைத்து இனத்தவரையும் இலங்கையராக கருதுகிறார் என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.

இந்நாட்டின் சிங்கள மக்களுடன், தமிழ், முஸ்லிம் மக்களும் நம்பிக்கையுடன் இலங்கையர் என்ற அடிப்படையில் கரம் கோர்த்துக்கொண்டு, அவருடன் பயணிக்க முடியும் என்ற நம்பிக்கையை அவர் எமக்குள் ஏற்படுத்தியுள்ளார் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஒரு கண் மைத்திரி, ஒரு கண் மகிந்த என்று சொல்லி வந்தவர்கள், எப்போதும் மகிந்தவுடன் உறவு கொண்டே இருந்தார்கள் என்று எமக்குத் தெரியும். எங்கள் அரசாங்கத்தில், சிறிது காலம் பிரதி அமைச்சை வகித்த போதும் கூட, இந்த உறவு இருந்தது எமக்குத் தெரியும். நாமே இவர்களை இங்கே வர வேண்டாம் எனத் தடுத்ததாக இவர்கள் பொய் செய்திகளை பரப்பி வந்ததும் எமக்குத் தெரியும். நாம் யாரையும் தடுக்கவில்லை என்பதை நான் கடந்த வாரமே கூறியிருந்தேன். இன்று இவர்கள் தங்களது இரகசிய உறவை பகிரங்கப்படுத்தியுள்ளார்கள் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுடனான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரசாரக் கூட்டம், இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சந்திரகுமாரின் ஏற்பாட்டில், இரத்தினபுரி நகர சபை மண்டபத்தில் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் மேலும் உரையாற்றி மனோ கணேசன்,

எங்கள் இன்றைய அரசின் எல்லா நடவடிக்கைகளும் திருப்தியானவை அல்ல என்பது நான் அடிக்கடி பகிரங்கமாகக் கூறும் உண்மை. ஆனால், ஒப்பீட்டளவில் நாம் 2015 ஆம் வருடத்திலிருந்து முன்னேறி வந்துள்ளோம். இதை எவரும் மறுக்க முடியாது. இன்று எமக்குள் இருக்கின்ற சில பிழைகளையும் திருத்தி, எமது பயணத்தின் அடுத்த கட்டத்தை இன்னமும் சிறப்பாகக் கொண்டு செல்லக்கூடிய தகைமை சஜித் பிரேமதாஸவுக்கு உண்டு. ஆகவே இந்நாட்டில் இன்று இருக்கக் கூடிய சந்தோசம், மகிழ்ச்சி, சுதந்திரம், ஜனநாயகம் தொடர வேண்டுமென்றால் சஜித்துக்கு வாக்களிக்க வேண்டும்.

இன்றைய சந்தோசம், மகிழ்ச்சி, சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றைப் புறந்தள்ளி மீண்டும் 2015 ஆம் வருடத்தை நோக்கிப் பின்னாலே செல்ல வேண்டும் என்றால், நான் சொன்ன இறுதிச்சுற்றின் இரண்டாம் வேட்பாளருக்கு வாக்களியுங்கள். கவலை, துன்பம், சர்வாதிகாரம் மீண்டும் வர வேண்டுமென்றால், இந்த இரண்டாம் வேட்பாளருக்கு வாக்களியுங்கள். ஆனால், இந்நாட்டில் வாழும் நிதானமாக சிந்திக்கத் தெரிந்த மக்களுக்கு எவருக்கு வாக்களிக்க வேண்டுமென்று நன்கு தெரியும் என நான் நினைக்கின்றேன். இது ஜனாதிபதித் தேர்தல். பாராளுமன்றத் தேர்தல் அல்ல, என்பதும் நிதானமாகச் சிந்திக்கத் தெரிந்த மக்களுக்கு நன்கு தெரியும் என நான் நினைக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மர்மக்கும்பல் துப்பாக்கிச்சூடு; 14 பொலிஸார் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மெக்சிக்கோவில் ஆயுதங்களுடன் கூடிய மர்மநபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 14 பொலிஸார் படுகொலை செய்யப்பட்டனர்.

அகுயிலில்லா பகுதியில் நேற்று ஆயுதங்களுடன் வந்த அடையாளம் தெரியாத மர்மநபர்கள் கடும் துப்பாக்கிச் சூட்டை நடத்தினர். இதன்போது 14 பொலிஸார் உயிரிழந்தனர்.

போதை ஒழிப்பு நடவடிக்கையின் போதே இச்சம்பவம் நடைபெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் இச்சம்பவத்தின் போது 2 பொலிஸ் வாகனங்களும் தீ வைத்து எரிக்கப்பட்டன. குறித்த துப்பாக்கிதாரிகளைத் தேட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டின் பாதுகாப்புப் பேரவை தெரிவித்தது.

இதேவேளை பொலிஸார் மீதான இந்த வெறிச்செயலுக்கு அப்பகுதி ஆளுநர் கடும் கண்டனம் வெளியிட்டார். (ஜ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மூட்டுவலி, உடல்வலியும் வாதநாராயணன், முடக்கறுத்தான் மூலிகைகளும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்



வாதநாராயணன்



முடக்கறுத்தான்

இன்று உலகத்தையே ஆட்டிப்படைக்கும் வியாதிகளில் கொடிய வியாதி யாதி மூட்டு வலியாகும். "மூட்டுவாதம் எலும்பு, மூட்டுக்களைத் தாக்கி இருதயத்தையும் கடிக்கும்." என்பது மருத்துவ பழமொழி ஆனால் மனிதன் சர்வசாதாரணமாக நினைத்து வலி ஏற்படும் போது வலி நிவாரண மாத்திரைகளைச் சாப்பிட்டு வலிகளை அமுக்கி விடுகின்றான். உண்மையில் வலி என்பது வியாதி அல்ல. இது ஒரு வியாதியின் அறிகுறியே யாகும். வலியினால் மனிதனை நடக்கமுடியாமல், உட்கார முடியாமல், படுக்க முடியாமல் தவிக்க வைக்கும் கொடுமையான நோய் மூட்டு வலியாகும். இவ் வியாதிகூட எமது உணவுப் பழக்க வழக்க மாறுபாட்டாலும், மற்றும் வாழ்க்கை முறை மாறுபட்டாலும் இளம்பருவத்திலேயே இவ் வியாதிகள் ஏற்பட வழிவகுக்கின்றது.

எனவே வலி நிவாராணி மாத்திரைகளை அடிக்கடி மேற்படி நோய் நிலைகளில் பயன்படுத்தினால் எமது பிரதேச மூலிகைகளான வாதநிவாரணி, முடக்கறுத்தான் மூலிகைகளை எவ்வாறு பயன்படுத்தி பயன் பெறலாம் எனப்பார்ப்போம்.

### வாத நாராயணன்

இது சுமார் 5, 6 மீற்றர் உயரம் வரைக்கும் பல கிளைகளுடன் சிறிது அடர்த்தியாக வளரும் மரம்.

Botanical Name:- Delonix alata

Family:- Caesalpiniaceae

வாதநாராயணன் கீரையை ஒரு கைப்பிடி அளவு எடுத்து கசாயமாக்கிக் குடித்தால் மூட்டுவலி, இடுப்பு வலி, கழுத்துவலி போன்றன குணமாகும்.

வாதநாராயணன் கீரையை பூண்டு சேர்த்து அவித்து சாப்பிட்டால் வாயுப் பிரச்சினைகள் குணமாகும்.

வாதநாராயணன் இலைகளை இரண்டு கைப்பிடியளவு எடுத்து சட்டியிலிட்டு சிறிது நல்லெண்ணெயிட்டு வதக்கி கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, இஞ்சி, கொத்தமல்லி, மிளகாய் இவற்றை போட்டு இதனுடன் வெள்ளைப் பூண்டும் சேர்த்து சிவக்க வதக்கி சிறிதளவு உப்பு சேர்த்து அரைத்து சோற்றுடன் கலந்து பிசைந்து உண்டுவர மலம் இலகுவாக கழிவதுடன் மூட்டு வலிகள், உடல் வலியும் நன்றாக குறையும்.

முடக்குவாதத்திற்கு வாதநாராயணன் கீரை ஒரு கைப்பிடியளவு எடுத்து உள்ளி 3 பல், சுண்டங்காய் 25 கிராம், பெருங்காயம், சேர்த்து சிறிதளவு நல்லெண்ணெயில் அரைத்து சாப்பிட்டுவர சிறந்த நிவாரணியாகும்.

வாதநாராயணன் கீரையை உலரவைத்து அதனுடன் அரிசித்தவிடு சேர்த்து வறுத்து துணியில் முடிந்து கட்டி ஆவியில் சூடுகாட்டி வலியுள்ள இடங்களிற்கு ஒற்றடம் இடலாம். வலி நன்கு குறையும்.

வாதநாரயணன் கீரையை உலர்த்தி பொடித்தோ அல்லது. பச்சையாகவோ குரக்கன்மாவுடன் சேர்த்து தோசை செய்து சாப்பிட்டு வந்தாலும் உடல்வலி, மூட்டுவலி குறையும்.

வாதநாராயணன் கீரை சூப்

வாதநாரயணன் கீரை இரண்டுகைப்பிடி, மிளகு 8, சுக்குப்பொடி 1/2 தேக்கரண்டி, பெருங்காயம் 1/4 தேக்கரண்டி, உள்ளி 3பல், சீரகம் தேவையான அளவு, பெருஞ்சீரகம் தேவையான அளவு, சின்ன வெங்காயம் தேவையான அளவு, உப்பு சிறிதளவு, நெய் 1 தேக்கரண்டி

வாதநாராயணன் கீரையுடன் சீரகம், பெருஞ்சீரகம், வெட்டிய வெங்காயம், பூண்டு, பெருங்காயம், சுக்குப்பொடி, மிளகு ஆகியவற்றை போட்டு 8 டம்ளர் நீர் விட்டு 2 டம்ளராக வற்றப்பண்ணி பருகவும். அடிக்கடி தயாரித்து குடித்து வந்தால் மூட்டுவலி, உடல்வலி, தணியும்.

வாதநாராயணன் இலைகளை உலர்த்தி பொடி செய்து 5 கிராம் அளவு பொடியை 200 மில்லி வெந்நீரில் 10 நிமிடங்கள் வரை ஊறவைத்து சாப்பிட்டால் மூட்டுக்களில் மாறி, மாறி ஏற்படும் வலி தணியும்.

வாதநாராயணன் மூலிகையை வாரத்தில் மூன்று நாட்களாவது மூட்டுவலி உள்ளவர்கள் பயன்படுத்த வேண்டும்.

### முடக்கறுத்தான்

எங்கும் வேலிகளில் ஏறிப்படரும் ஏறுகொடி. இணர் நுனியில் சிறுபற்றுக்கம்பி இருக்கும் தரிசு நிலங்களிலும், தோட்டக் கரைகளிலும் இயற்கையாக பரம்பி காணப்படும்.

தாவரவியற் பெயர்:- Cadiospermum Halicacabum

குடும்பம்:-Sapindaceae

100 கிராம் இலையிலுள்ள சத்துக்கள்:-

புரதம் - 4.7 கிராம், கொழுப்பு - 0.6 கிராம், காபோவை தரேற்று - 9.1 கிராம், சக்தி - 61 கிலோ கலோரிகள்.

அரிசி, உளுத்தம்மாவை அரைப்பதுடன் இதன் இலைகளையும் சேர்த்தரைத்து தோசை செய்து சாப்பிட்டால் என்புகள் பலப்படுவதுடன் வாத நோய்களும் குணப்படும்.

இதன் கொடிகளை சேகரித்து 1 பங்கு கொடிக்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 60 மில்லி காலை, மாலை 11 நாட்கள் அருந்திவர நரம்பு சம்பந்தமான பிடிப்புக்கள் நாளடைவில் குணமடையும்.

இதன் இலைகளில் சாறுஎடுத்து 300 மில்லி சாற்றிற்கு 600 மில்லி தேங்காய் எண்ணெயிட்டு தைலபதத்தில் காய்ச்சி வடித்து வலியுள்ள மூட்டுக்களிற்கும் பூசலாம்.

முடக்கறுத்தான் கீரை, வாதநாராயணன் கீரை இரண்டையும் சம அளவு எடுத்து அவற்றோடு உள்ளி 1 பல்லு, மஞ்சள் தூள் சிறிதளவு ஆகியவற்றை சேர்தரைத்து அதிகாலையில் 5-10 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் அனைத்துவிதமான மூட்டு வலிகளும் குணமாகும்.

முடக்கறுத்தான் கீரைச் சாற்றில் சுக்கு, மஞ்சள், வெந்தயம் ஆகியவற்றை சமஅளவு எடுத்து ஊற வைத்து உலர்த்தி பொடித்து தினமும் காலை, மாலை இரு வேளையும் 2 கிராம் அளவு சாப்பிட்டு வந்தாலும் வாத நோய்கள் குணமாகும்.

முடக்கறுத்தான் கீரைச் சாற்றில் உளுந்து, கறுப்பு எள்ளு இரண்டையும் சம அளவு எடுத்து ஊற வைத்து உலர்த்தி பொடியாக்கி, 50 கிராம் அளவு எடுத்து சின்னவெங்காயம் தேவையான அளவு உப்பு சேர்த்து கஞ்சி காய்ச்சி குடித்து வந்தால் எல்லாவிதமான மூட்டுவலியாகிலும் படிப்படியாக குறைய ஆரம்பிக்கும்.

முடக்கறுத்தான் இரசம்.

எலும்மிச்சம்பழம்-1, தக்காளி-3, சீரகம்-2 தேக்கரண்டி, மிளகு -1/2 தேக்கரண்டி, உள்ளி -6 பல், முடக்கறுத்தான் கொடி பொடியாக நறுக்கியது-5கைப்பிடியளவு, 1000 மில்லி நீர், பசு நெய்-1 தேக்கரண்டி. முடக்கறுத்தானை தண்ணீரில் வேகவைக்க வேண்டும் வெந்ததும் நெய்விட்டு சீரகம் 1 தேக்கரண்டி போடவும் சீரகம் வெடித்ததும் வெந்த முடக்கறுத்தான் ரசத்தை ஊற்ற வேண்டும்.

தக்காளியை கடைந்து அத்தோடு எலுமிச்சைப்பழச்சாறு பிழிந்து ஊற்றி உப்பை போட்டு சீரகம், மிளகு, பூண்டு, இவற்றை உடைத்து போட்டு கறிவேப்பிலை உருவிப் போட்டு ரசம் ஒரு கொதி வந்ததும் இறக்கி வைத்து ஆறவிட்டு 200 மில்லி அளவு குடிக்கவும். இவ்வாறு 3 வாரம் குடித்து வர மூட்டுவலி, வாத நோய்கள் படிப்படியாக குறையும்.

முடக்கறுத்தான் இலைகளை உடைத்து உளுந்துடன் சேர்த்தரைத்து தோசை செய்தும் சாப்பிட்டு வரலாம்.

பக்கவாதம் உள்ளவர்கள், சுக்கு, மிளகு, ஏலம், சீரகம், முடக்கறுத்தான் இலை உலர்ந்தபொடி, வாதநாராயணன் இலை உலர்ந்த பொடி எல்லாம் சம அளவு எடுத்து பொடித்து அரித்து 2 கிராம் அளவு வெந்நீரில் காலை, மாலை சாப்பிட்டுவர தசைகளும் மூட்டுக்களும் பலம்பெறும்.

இதைத்தவிர்த்து வலி நிவாரணி மாத்திரைகளை பயன்படுத்தினால் தற்காலிக பலனையும், பக்கவிளைவுகளையும் கொண்டுவர வாய்ப்புள்ளது. இவ்வாறான பிரதேச மூலிகைகளை உணவுக் கூறாகவோ, அன்றி குடிநீர், வெளிப்பூச்சு மூலிகை மருந்தாக பயன்படுத்தி வர பக்க விளைவுகளற்ற பயனைப் பெறக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறான மூலிகைகளை கீரையாக, ரசமாக, சூப்பாக, தோசை, கஞ்சி போன்ற முறைகளில் பயன்படுத்திவர உடல் ஆரோக்கியமும் சீராக போணப்படும்.

# தலைமன்னார் கடற்பரப்பில் கஞ்சாப் பொதிகள் மீட்பு

(மன்னார்)


தலைமன்னார் கடற்பரப்பில் மிதந்த ஒரு தொகை கேரளக் கஞ்சாப் பொதிகளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கடற்படையினர் மீட்டுள்ளனர்.


தலைமன்னார் கடற்பரப்பில் மிதந்து கொண்டிருந்த சந்தேகத்திற்கிடமான 2 பொதிகளை கடல் ரோந்து பணியில் ஈடுபட்ட கடற்படையினர் அவதானித்துள்ளனர். குறித்த இரண்டு பொதிகளையும் மீட்ட கடற்படையினர் அதனை சோதனைக்கு உட்படுத்திய போது அதில் கேரளக் கஞ்சா இருந்துள்ளது.

மீட்கப்பட்ட கஞ்சா சுமார் 86 கிலோ 520 கிராம் என கடற்படை தெரிவித்துள்ளது. தலைமன்னார் க்டலில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளின் காரணமாக சந்தேக நபர்கள் கேரளக் கஞ்சாப் பொதிகளை கடலில் போட்டு விட்டு தப்பித்திருக்க முடியும் என கடற்படை தெரிவித்துள்ளது. (9-285)

## கனமழை தொடர்வதால்

# மன்னாரில் நீரில் மூழ்கிய கிராமங்கள்





(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கன மழை காரணமாக பல கிராமங்கள் மற்றும் தாழ் நிலப்பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்காளாக பெய்துவரும் கன மழைகாரணமாக குளங்கள், கால்வாய்கள் மற்றும் நீரோடைகள் நிறைந்து மேலதிக நீர் மக்கள் வசிக்கும் தாழ் நிலப்பகுதிகளுக்குள் வருவதன் காரணமாக பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. குறிப்பாக மன்னார் பிரதேச சபைக்குட்டப்பட்ட சாந்திபுரம், ஜீவபுரம், ஜிம்றோன் நகர், எமில் நகர் உட்பட பல கிராமங்கள் முழுவதும் நீர் சூழ்ந்துள்ளதுடன் பாதைகள் முழுவதும் நீரினால் மூடப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால் வயல் நிலங்கள் மற்றும் தோட்டச்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் நிலங்களுக்குள்ளும் நீர் நிறைந்து பயிர்கள் அழுகும் நிலையில் காணப்படுகின்றன.

அதேநேரத்தில் தொடர்ச்சியாக மழை பெய்யுமானால் தாழ்வான பகுதிகளில் உள்ள சில கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிய வருகிறது. (9-285)

# பாலம் உடைந்ததால் துணுக்காய்-அக்கராயன் போக்குவரத்து பாதிப்பு



(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்திற்கும் கோட்டைகட்டியகுளம் கிராமத்திற்கும் இடையே உள்ள பாலம் உடைந்திருப்பதன் காரணமாக போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன. துணுக்காயில் இருந்து அக்கராயன் செல்லும் வீதியில் குறித்த பாலம் காணப்படுகின்றது. 1968 ஆம் ஆண்டு இப்பாலம் அமைக்கப்பட்டது. இப்பாலம் தற்போது உடைந்திருப்பதன் காரணமாக துணுக்காயில் இருந்து அம்பலப் பெருமாள்குளத்திற்குச் செல்லும் ஒரேயொரு தனியார் பேருந்து சேவையும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. துணுக்காய் கமநல சேவை நிலையம் ஊடாக அம்பலப் பெருமாள்குளம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற உரத்தை கிராமத்திற்கு குறித்த வீதி வழியாக எடுத்து வர முடியாததன் காரணமாக மாற்று வழியை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். அம்பலப்பெருமாள் குளத்தில் இருந்து கோட்டைகட்டிய குளம் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் இப்பாலம் வழியாக பயணிப்பதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர். குறித்த பாலத்தை விரைவாக புனரமைத்துத் தருமாறு துணுக்காய் பிரதேச செயலாளரிடம் கோட்டைகட்டிய குளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராமங்களின் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. குறித்த பாலம் சேதமடைந்திருப்பதன் காரணமாக துணுக்காய்க்கும் அக்கராயனுக்கும் இடையிலான போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன.(9-350)

# முல்லைத்தீவு நீதிமன்றின் பகிரங்க ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் (மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், பட்டா வாகனங்கள், உழவு இயந்திரங்கள், உழவு இயந்திரப் பெட்டிகள், கையுழவு இயந்திரங்கள்) பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 2019.10.26 ஆம் திகதியன்று (சனிக்கிழமை) முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே பகிரங்க ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் அன்றைய தினம் இந்நீதிமன்ற வளாகத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(9)




# கையை வெட்டியவர் கைது

(தருமபுரம்)

இராமநாதபுரம் புதுக்காடு பகுதியில் நேற்று முன்தினம் சகோதரர்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் அண்ணன் மற்றும் அவரது நண்பனின் கைகளை தம்பி வெட்டியுள்ளார்.

படுகாயமடைந்த இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குறித்த விடயம் தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு கைகளை வெட்டிய தம்பியைக்கைது செய்துள்ள்ளனர்.(9-316)

# முதியோர் தின நிகழ்வு





(நெளுக்குளம்)

வவுனியா வைரவபுளியங்குளம் முதியோர் சங்கத்தால் சர்வதேச முதியோர் தின நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வைரவபுளியங்குளம் முதியோர் சங்கத்தின் தலைவர் ம.தேவராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதேச செயலாளர் கா.உதயராஜா, மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஶ்ரீநிவாசன், கிராம உத்தியோகத்தர் க.விஜயகுமார், தமிழருவி த.சிவகுமாரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முதியவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்று, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் விசேடமாக "வடிவுறு மூப்பு" எனும் தலைப்பில் தமிழருவி சிவகுமாரனால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டிருந்ததுடன், சிதம்பரேஸ்வரர் நடனாலயத்தின் ஏற்பாட்டில் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.(9-299)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம்





(கண்டாவளை)

வாசிக்கும் சமூகத்தை உருவாக்க சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம் எனும் தொனிப் பொருளில் வவுனியா மதினா வித்தியாலய மாணவர்களால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமான பேரணி பூந்தோட்டம் சந்தி வரை சென்று அங்கு வாசிப்பின் முக்கியத்துவம் தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டன. இதில் அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (9-315)

# புதுக்குடியிருப்பில் நாய்கள் தொல்லை

(கண்டாவளை)


முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக்காணப்படுவதுடன், அதிகளவானோர் நாய்க்கடிகளுக்கு இலக்காகி வருவதுடன் வீதி விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சந்தி உள்ளிட்ட பிரதேசங்களில் தற்போது கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக, பிரதான வீதி மற்றும் நகரின் வர்த்தக நிலையங்களை அண்மித்த பகுதிகளில் இவ்வாறு கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகளவிலேயே காணப்படுகின்றன.

இவ்வாறு நாய்களின் தொல்லைகளால் அதிகளவான விபத்துக்கள் இடம்பெற்று வருவதுடன், பலர் நாய்க்கடிகளுக்கும் இலக்காகி வருவதாகவும் வர்த்தகர்கள், பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள பாடசாலைச் சூழல்களிலும் இவ்வாறான கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும் பெற்றோர், ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (9-315)





வவுனியா கோவில் குளம் ஶ்ரீதேவி பூதேவி சமேத ஶ்ரீமஹா விஷ்ணு ஆலய வருடாந்த பிரமோற்சவத்தில் கடந்த சனிக்கிழமை தேர்த்திருவிழா சிறப்பாக இடம்பெற்றது.

# அக்கராயனில் குடிநீர் விநியோகம் தடை

## 250இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் கடந்த இருபது நாட்களுக்கு மேலாக குடிநீர் விநியோகம் இடம் பெறவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் அக்கராயனில் குடிநீர்த் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக நீர்த்தாங்கி உள்ளது. குடிநீருக்கு உரிய கிணறு அக்கராயன் இடதுகரை வாய்க்காலுக்கு அருகில் உள்ளது.

குறித்த கிணற்றின் நீர் ஊற்றுகள் அடைக்கப்பட்டு கிணற்றின் நீர் மட்டம் அடிநிலையைச் சென்றடைந்ததன் காரணமாக கிணற்றின் ஒரு பக்கத்தினால் குழி தோண்டப்பட்டு நீர் ஊற்றுகள் அதிகரிப்பதற்கான வேலைகள் தொடங்கப்பட்டன.

இந்த நிலையில் மழை பெய்ததன் காரணமாக வெளி வெள்ளம் கிணற்றிற்குள் சென்று தற்போது குடிநீர் விநியோகம் நடைபெறவில்லை.

குறித்த வேலைகள் தொடங்கும்போது குடிநீர் வழங்கலுக்குரிய மாற்று ஒழுங்குகளும் செய்யப்படவில்லை.

இந்நிலையில் குறித்த கிணற்றின் வேலையை விரைவாக நிறைவு செய்து குடிநீர் விநியோகத்தினை ஆரம்பிக்குமாறு குடிநீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள குடும்பங்கள் கிராம உத்தியோகத்தரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை குறித்த வேலையை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்களினால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது குடிநீரைப் பெற்று வந்த 250 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் குடிநீருக்கு அலைந்து திரிகின்ற நிலைமை காணப்படுகின்றது. (9-350)

# புகையிரதக் கடவைக்கு பாதுகாப்புவேலி அமைப்பு




(நெளுக்குளம்)

வவுனியா பனிக்கநீராவியடி பகுதியிலிருந்து பெரியமடு கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைக்கு பாதுகாப்புவேலி அமைத்துக் கொடுக்கப்பட்டு நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா இறம்பைக்குளம் ஈஷிமிஷன் ஏற்பாட்டில் பிரதான பிஷப் எம்.பி.ராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஜ.டி.எம். கம்பஸ் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் பிரதான நிறைவேற்றுப்பணிப்பாளர் விநாயகமூர்த்தி ஜனகனினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கிராம உத்தியோகத்தர், ஓமந்தை பொலிஸ் உதவி பொறுப்பதிகாரி, கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (9-299)

## இளைஞர்கள் கைது! பொலிஸ் நிலையத்தில் குழப்பம்

(நெளுக்குளம்)

வவுனியா புளியங்குளம் பொலிஸாரால் இளைஞர்கள் நான்கு பேர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யபட்டுள்ளனர். குறித்த இளைஞர்கள் தங்களுக்குள் முரண்பட்டு கொண்ட நிலையில் ஒருவர் போத்தல் ஒன்றால் தனது கையை தாக்கி காயப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் காயமடைந்த அவரை புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையில் ஏனைய இளைஞர்கள் சிகிச்சைக்காக அனுமதித்திருந்தனர்.

இந்நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொண்ட வைத்தியருக்கும் குறித்த இளைஞர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. குறித்த முரண்பாடு தொடர்பாக புளியங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

வைத்தியசாலைக்குச் சென்ற பொலிஸார் அங்கு நின்ற இளைஞர்கள் இருவரை கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றதுடன் மேலும் இருவர் உட்பட நான்கு பேரை கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை பார்ப்பதற்காக இளைஞர்களின் உறவினர்கள் புளியங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு சென்ற போது பொலிஸார் தம்மை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை என்றும், எமது பிள்ளைகளை பொலிஸார் கடுமையாக தாக்கியதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தினர். இதனால் குறித்த பகுதியில் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது. (9-299)

## வாழ்வோம் வளம் பெறுவோம் திட்டம்; 32 குடும்பங்கள் உள்ளீர்ப்பு



(முல்லைத்தீவு)


வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரனால் முன்னெடுக்கப்படும் வாழ்வோம் வளம் பெறுவோம் செயற்றிட்டத்தின் இருபத்தொன்பதாம் கட்டமானது கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்குப் பகுதியில் அமைந்துள்ள அவரின் மக்கள் தொடர்பகத்தில் இடம்பெற்றது.

புலம்பெயர் அன்பர்களின் பங்களிப்பில் முன்னெடுக்கப்படும் இச்செயற்றிட்டத்தின் இருபத்தொன்பதாம் கட்டத்தில் தாயகத்தைச் சேர்ந்த 32 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டு அவர்களுக்கான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இது தொடர்பில் மேலும் அறிய வருகையில்,

புலம்பெயர்ந்து வாழும் திருவிணையர் செந்தூர்ச்செல்வன் உமாதேவி தம்பதியினரின் புதல்வன் பமிசனின் 10 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவர்களால் இவ்வுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (9)

## இரட்டை வாய்க்கால்-புதுமாத்தளன் வீதி சீரில்லை - மாணவர்கள், பொதுமக்கள் அவதி



(கண்டாவளை)

முல்லைத்தீவு இரட்டை வாய்க்கால் புதுமாத்தளன் வீதி இதுவரை புனரமைக்கப்படாமையினால் இவ்வீதியைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் அன்றாடம் துன்பங்களை அனுபவித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஏ-35 வீதியின் இரட்டை வாய்க்கால் சந்தியிலிருந்து அம்பலவன்பொக்கணை,வலைஞர் மடம், புதுமாத்தளன் ஊடாக சாலை வரைக்குமான சுமார் 13 கிலோ மீற்றர் வீதி இதுவரை புனரமைக்கப்படவில்லை என்றும் இதனால் தாங்கள் போக்குவரத்துக்களில் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

தற்போது பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளமையால் வீதியில் வெள்ளநீர் தேங்கி காணப்படுவதாகவும் இதனால் மேலும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர். (9-315)




## “கலைக்குரிசில்” விருது

(வவுனியா)

வவுனியாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பண்பாட்டுப் பெருவிழாவில் யாழ்ப்பாணம் நாச்சியமார் கோவிலடியைச் சேர்ந்த விஸ்வப்பிரம்மஸ்ரீ இராசையா ஸ்ரீதரனுக்கு “கலைக்குரிசில்” விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

69 வயதுடைய இவர் கிராமியக் கலையான வில்லுப்பாட்டு மூலம் அளப்பரிய சேவையாற்றியமைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (9)

## பரிசளிப்பு விழா



(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. பாடசாலை முதல்வர் ப.நடேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. (9-350)



**தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினால் 6 இலட்சம் ரூபாய் பெறுமதியிலான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு பூநகரியில் அமைந்துள்ள தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது தெரிவு செய்யப்பட்ட 20 குடும்பங்களுக்கு தலா 30 ஆயிரம் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. பசு வளர்ப்பு, கோழி மற்றும் ஆடு வளர்ப்புக்காகவும் அதே வேளை மீன்பிடி உள்ளிட்ட வாழ்வாதார முன்னேற்றத்திற்காகவும் குறித்த வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.**

## புதுக்குடியிருப்பு அபிவிருத்தியடையுமா? பொதுமக்கள், வர்த்தகர்கள் கேள்வி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முதன்மையான உப நகரங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற புதுக்குடியிருப்புப் பகுதியில் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படாமையினால் தேவை கருதி வரும் பொதுமக்கள், வர்த்தகர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய உப நகரங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற புதுக்குடியிருப்பு நகரில் அதிகளவான மக்கள் வாழ்ந்து வருவதுடன், பல்வேறு தேவை கருதி அதிகளவான மக்கள் கூடுகின்ற ஓர் இடமாகவும் காணப்படுகின்றது.

இந் நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கான பேருந்து நிலையம் உரிய இடத்தில் இதுவரை உரிய முறையில் அமைக்கப்படவில்லை.

அதாவது, புதுக்குடியிருப்பு பகுதிக்கான பேருந்து நிலையத்திற்கு உரிய இடம் தெரிவு செய்யப்படாமல் பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியின் புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளபோதும், இன்றுவரை பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு நகரில் இருந்து ஒட்டுசுட்டான் வவுனியா செல்லும் பயணிகள் ஒட்டுசுட்டான் வீதியிலும் முல்லைத்தீவு செல்லும் பயணிகள் முல்லைத்தீவு வீதியிலும் அதேபோல் கிளிநொச்சி செல்லும் பயணிகள் பரந்தன் வீதியிலும் தரித்து நிற்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்துடன், குறுந்தூர போக்குவரத்துச்சேவைகள் இன்மை மற்றும் மேலதிக அடிப்படை வசதிகள் இன்மை எனப்பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மிக முக்கிய உப நகரமாகக் காணப்படும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் தேவைகளை நிறைவு செய்து தருமாறு பொதுமக்கள், வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## பாரதம்

# சிலிண்டர் வெடித்ததில் 12 பேர் பரிதாபமாகப் பலி!





(முகமதாபாத்)

இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் எரிவாயு சிலிண்டர் வெடித்து சிதறியதில் 12 பேர் உயிரிழந்ததுடன் 15 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

முகமதாபாத்க்கு அருகிலுள்ள வாலித்பூர் பகுதியில் அமைந்துள்ள இரண்டு மாடிக் குடியிருப்புக் கட்டடத் தொகுதியிலேயே குறித்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் இடம்பெற்ற இந்த வெடிப்புச் சம்பவத்தில் இரண்டு மாடிக் குடியிருப்பு கட்டடத் தொகுதி இடிந்து விழுந்தது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரும், தீயணைப்பு வீரர்களும் விபத்தில் சிக்கியவர்களை மீட்டதுடன் படுகாய மடைந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதித்தனர். (ஐ)

# பொருளாதாரத்திற்கான நோபல் இந்தியர் உட்பட மூவருக்கு



(ஸ்டாக்ஹோம்)

வறுமையை ஒழிப்பதற்கான முன்னோடித் திட்டங்களை வகுத்தமையால் இந்தியர் உட்பட 3 பேருக்கு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம், வேதியியல் ஆகிய துறைகளில் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது. அவ்வகையில் இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், 2019ஆம் ஆண்டு பொருளாதாரத் துறைக்கான நோபல் பரிசு சுவீடன் தலைநகர் ஸ்டோக்ஹோமில் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

அதன்படி பொருளியல் நிபுணர்கள் அபிஜித் பானர்ஜி, எஸ்தர் டூஃப்லோ, மைக்கேல் கிரீமர் ஆகியோர் இந்த ஆண்டு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டனர். (ஐ)

# ஜப்பானைப் புரட்டி

# உயிரிழப்பு 70 ஆ

(டோக்கியோ)

**ஜப்பானில் ஹகிபிஸ் புயலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்தது.**

பசுபிக் பெருங்கடலில் உருவாகிய 'ஹகிபிஸ்' புயல், ஜப்பானின் டோக்கியோ மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைத் தாக்கி பேரழிவை ஏற்படுத்தியது. இந்த புயலைத் தொடர்ந்து பரவலாக கனமழை பெய்து வருகிறது.

இந்தப் புயல் மழையால் போக்குவரத்து முடங்கி, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்ததால், அப்பகுதிகளில் வசித்த மக்கள், பாதுகாப்பு முகாம்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். புயலால் 5 இலட்சம் வீடுகள் இருளில் மூழ்கின. மீட்புப்பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

# தொடரும் குர்து போராளி

# துருக்கி மீது பொருளாத

# அமெரிக்கா அதிரடி ந

(வோஷிங்டன்)

சிரியா மீதான துருக்கியின் போர் நடவடிக்கைகளுக்குப் பதிலடியாக துருக்கி மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுவதாக ட்ரம்ப் அறிவித்த பிறகு அங்குள்ள குர்து போராளிகள் மீது துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த் தாக்குதலில் குர்து போராளிகள் மற்றும் அப்பாவிப் பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் பலியாகினர்.

துருக்கியின் இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்கா, பிரான்ஸ் நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. போர் நடவடிக்கைகளை நிறுத்தாவிடில், துருக்கியின் பொருளாதாரம் முற்றிலும் அழிக்கப்படும் என 4 தினங்களுக்கு முன்பு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், துருக்கி அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

ஆனால், இந்த எச்சரிக்கையை துருக்கி அரசு கண்டுகொள்ளவில்லை. 'அமெரிக்க ஜனாதிபதியின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி எங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்ள மாட்டோம். குர்து போராளிகள்

# தொடர்ச்சியான ஊழல்

# தென்கொரிய நீதியமை



# டிப்போட்ட புயல்!

## அறுக அதிகரிப்பு



மீட்பு பணிகளில் ஹெலிகொப் டர்கள், படகுகள், பல்லாயிரக்கணக்கான இரா ணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்ப ட்டனர். (ஜ)

# ளிகள் மீதான தாக்குதல் ாதாரத் தடைகள் விதிப்பு

## நடவடிக்கை

மீதான போர் நடவடிக்கைகளை நிறுத்தப் போவதில்லை' என துருக்கி நாட்டு வெளியுறவுத்துறை மந்திரி மெவுல்ட் காவ்சக்லோ தெரிவித்தார். அதன் பின்னரும் துருக்கி தனது போர் நடவடிக்கைகளை தொடர்ந்தது.

இந்நிலையில், துருக்கி மீதான பொருளாதாரத் தடைகளை விதிக்க தனது நிர்வாகத்திற்கு அதிகாரம் அளிக்கும் நிர்வாக உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார். துருக்கி அரசு மீது பொருளாதார தடைகளை விதித்துள்ளதாகவும், துருக்கியுடனான 100 பில்லியன் டொலர் மதிப்பிலான வர்த்தக ஒப்பந்தத்திற்கான



பேச்சு வார்த்தையையும் முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாகவும் அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்தார்.

அதே நேரத்தில் அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசிக்கு ட்ரம்ப் எழுதிய கடிதத்தில் துருக்கி பிரச்சினையை 'தேசிய அவசரநிலையாக அறிவித்தார். (ஜ)

# ஊழல் குற்றச்சாட்டுக்கள்; மைச்சர் இராஜினாமா

(சியோல்)

தென்கொரிய நீதியமைச்சர் சோ குக் பதவி விலகினார்.

தென்கொரிய நீதியமைச்சராக, சோ குக்கை ஜனாதிபதி மூன் ஜே-இன் கடந்த மாதம் நியமித்திருந்தார்.

எனினும் அவருக்கு எதிராகவும் அவரது குடும்பத்தினருக்கும் எதிராக தொடர்ச்சியாக ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

அத்துடன், அவரது நியமனத்திற்கு எதிராக சியோல் நகரில் போராட்டங்கள் நடைபெற்றன.

இந்நிலையிலேயே அவர் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், 'நாட்டின் நீதித்துறையிலும், விசாரணை அமைப்புகளிலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உறுதியேற்றிருந்தேன்.

இதன் காரணமாக, எனது குடும்பம் குறிவைக்கப்பட்டுள்ளது. எனது நியமனத்தால் எழுந்த குழப்பத்துக்கு மக்களிடம் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்தார். (ஜ)


# 141 கோடி ரூபாவில் தங்கச் செருப்பு

(டுபாய்)

டுபாய் புர்ஜ் கலிபா கட்டடத்தின் தோற்றத்தில் உருவாக்கப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ள தங்க செருப்பு, உலகின் விலை உயர்ந்த செருப்பு என்ற பெருமையை பெற்றுள்ளது.

டுபாய் மரினாவில் நடந்த 'பேஷன் ஷோ' நிகழ்ச்சியில் பெண்களுக்கான, உலகிலேயே அதிக மதிப்புடைய செருப்பு அறிமுகம் செய்யப்பட்டது. இது 24 கரட் தங்கத்தில் தயாரிக்கப்பட்டது.


இந்த செருப்பை டுபாயில் வசித்து வரும் இத்தாலி நாட்டை சேர்ந்த ஆண்டோனியோ விட்ரி என்பவர் வடிவமைத்து தயாரித்துள்ளார். 30 கரட் வைரங்கள் மற்றும் கடந்த 1579ஆம் ஆண்டில் ஆர்ஜென்டீனாவில் கண்டெ



டுக்கப்பட்ட விண்கல் ஆகியவைகளை கொண்டு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. (ஜ)

# கூரை விழுந்ததில் 6 பேர் உயிரிழப்பு

## 40 பேர் படுகாயம்



(லிமா)

பெருவில் உள்ளூர் திருவிழாவின் போது கட்டடத்தின் கூரை சரிந்து விழுந்ததில் 6 பேர் உயிரிழந்ததுடன், 40 பேர் காயமடைந்தனர்.

பெருவின் தலைநகர் லிமாவுக்கு 200 கி.மீ. தொலைவில் உள்ள ஹுவாங்காயோ பகுதியில் நேற்று முன்தினம் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஜ)

# பிரெக்சிற்றை நிறைவேற்ற முன்னுரிமை வழங்கப்படும்

## பாராளுமன்றில் பிரிட்டன் ராணி உறுதி

(லண்டன்)

எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் 'பிரெக்சிற்றை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத் உறுதியளித்தார்.

ஐரோப்பியக் கூட்டமைப்பில் இருந்து பிரிட்டன் வெளியேறும் 'பிரெக்சிற்' நடவடிக்கைக்கான காலக்கெடுஎதிர்வரும் 31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.

ஆனால் 'பிரெக்சிற்' ஒப்பந்தத்தை பிரிட்டன் எம்.பி.க்கள் தொடர்ந்து நிராகரித்து வருவதால் ஒப்பந்தமில்லா 'பிரெக்சிற்றுக்கு வாய்ப்பு அதிகமாகியது.

இந்நிலையில் ராணி இரண்டாம்



எலிசபெத் பிரிட்டன் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றினார். இதன்போதே அவர் எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் 'பிரெக்சிற்றை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவித்தார். (ஜ)

# உயிர் அச்சுறுத்தலுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுத்த சிவில் சமூக அமைப்புக்கள்

## கோத்தபாயவின் ஆதரவாளர்களுக்கு அறிவுறுத்து

**(கொழும்பு)**

**கோத்தபாய ராஜபக்ஷவின் இரட்டைக் குடியுரிமையை சவாலுக்கு உட்படுத்திய சிவில் சமூக செயற்பாட்டாளர்களான பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர மற்றும் காமினி வெயங்கொட ஆகியோரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் உயிரச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறு வலியுறுத்தி சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் தனிநபர்கள் 165 பேரும், 21 மனித உரிமை மற்றும் சிவில் சமூக அமைப்புக்களும் கையெழுத்திட்டு ஊடக அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.**




கோத்தபாய ராஜபக்ஷவின் இரட்டைக் குடியுரிமையை சவாலுக்கு உட்படுத்தி வழக்குத்தாக்கல் செய்த சிவில் சமூக செயற்பாட்டாளர்களான பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர மற்றும் காமினி வெயங்கொட ஆகியோருக்கு எதிராக விடுக்கப்பட்டு வரும் உயிரச்சுறுத்தல்கள், நாட்டின் உரிமைகள் மற்றும் நீதியை முன்னிறுத்தி செயற்பட்டு வருவோரின் மனங்களில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

உரிய அதிகாரிகள் விரைவான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர்களுக்கான பாதுகாப்பை வழங்கவேண்டும்.

அதேபோன்று இந்த நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிப்பதுடன், அச்சுறுத்தல் செயற்பாடுகளிலிருந்து கோத்தபாய ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் விலகியிருக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

---

# படைத்தளபதிகளைப் பயன்படுத்தி கோத்தபாய தேர்தல் பரப்புரை



(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்த கருத்தை பயன்படுத்தி பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவருக்கு எதிராக தேர்தல் வன்முறையை கண்காணிக்கும் மையம் முறைப்பாடு செய்தது.

கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பாக 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் 28 ஆம் திகதி இராணுவத் தளபதி தெரிவித்த கருத்தடங்கிய முழுப்பக்க விளம்பரம் மூன்று பத்திரிகைகளில் வெளியானமை, தேர்தல் சட்டத்தை மீறும் வகையில் அமைந்துள்ளதால் நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவை குறித்த மையம் கேட்டுக் கொண்டது.

இதேவேளை பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபஷவுக்கு ஆதரவாக, இராணுவத் தளபதி வெளியிட்ட கருத்துடனான விளம்பரங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஐ.தே.கவும் முறைப்பாடு செய்யவுள்ளது.

பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட முழுப்பக்க விளம்பரங்களில், கோத்தபாய ராஜபஷ்வுக்கு ஆதரவாக வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களுடன் அவருக்கு ஆதரவாக ஜெனரல் சவேந்திர சில்வா வெளியிட்டுள்ள கருத்தும் இடம்பெற்றது. அந்த விளம்பரத்தில், தற்போதைய இராணுவத் தளபதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு சார்பாக வெளியிட்ட கருத்துக்களும் அதில் இடம்பெற்றிருந்தன. அதில் முன்னாள் படைத் தளபதிகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா 2009 ஆம் ஆண்டு வெளியிட்ட கருத்தை, பொதுஜன பெரமுன தமது தற்போதைய அரசியல் பரப்புரைக்குப் பயன்படுத்திக் கொண்டிருப்பது, நெறிமுறையற்றது என்று சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பரப்புரைக்குப் பொறுப்பான திஸ்ஸ அத்தநாயக்க எதிர்ப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தாயின் பெருமை

“அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்”

இதை விளக்குவதற்கு எத்தனையோபேர் எவ்வளவு கதைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காலத்திலே வியாசர் தன்னுடைய மகன் சுகருக்கு ஒரு கதை சொன்னாராம்.

நரசிம்ம புராணத்திலே அது வருகிறதாம். அதை ஒரு பெரியவர் சொல்லியிருக்கிறார். அந்த கதையை நான் இப்ப உங்களுக்குச் சொல்கிறேன்.

கோசல தேசத்தில் யக்ஞ சர்மா என்று ஒருத்தர் இருந்தார். அவருடைய பிள்ளை தேவசர்மா. இந்த தேவசர்மா குருகுலம் எல்லாம் முடித்துவிட்டு வீட்டுக்குப் போனார். அந்தச் சமயத்தில் அவருடைய அப்பா காலமாகிவிட்டார். உடனே இவர் ரொம்பவும் விரக்தியடைந்து விட்டார். ஊரை விட்டு கிளம்பி போய் விட்டார். இன்னொரு ஊரிலே போய் தங்கி விட்டார்.

தினமும் பகவானை தியானம் செய்ய வேண்டியது. பிச்சை வாங்கி சாப்பிட வேண்டியது. இப்படியே ஓடிக்கொண்டிருந்தது காலம்.

ஒரு நாள் காலையில் ஆற்றுக்குப் போனார். குளித்தார். வேட்டியை துவைத்து கரையில் காயப்போட்டார். அந்தச் சமயம் பார்த்து ஒரு காகமும் ஒரு கொக்கும் அந்தப் பக்கமாக வந்தது. வேட்டியைப் பார்த்தது. தூக்கிக்கொண்டு போய்விட்டது.

தேவசர்மா அதை பார்த்துவிட்டார். ரொம்பவும் கோபமாக அந்தப் பறவைகளைப் பார்த்தார். அவ்வளவு தான். அது இரண்டும் அப்படியே எரிந்து சாம்பலாகிவிட்டது. அவ்வளவு வலிமை அவருக்கு உண்டு.

அப்பேர்ப்பட்ட தேவசர்மா, அடுத்த நாள் சாவித்திரி என்ற ஒரு பதிவிரதை வீட்டுக்குப் பிச்சை வாங்குவதற்காக வந்தார். இவர் வந்து வாசலிலே நின்று கொண்டிருக்கிறார். அந்த அம்மா ரொம்ப நேரமா இவரை கவனிக்கவில்லை.

அவருடைய வீட்டுக்காரருக்கு ஏதோ பணிவிடைகள் செய்து கொண்டிருந்தார். அதையெல்லாம் முடித்துவிட்டு இவருக்கு பிச்சை போடுவதற்காக வெளியே வந்தார்.

இவர் உடனே அந்த அம்மாவை கோபமாக முறைத்துப் பார்த்தார். ஆற்றங்கரையிலே காக்காவையும் கொக்கையும் முறைத்து பார்த்தாரே அது மாதிரி! “என்ன அங்கே அந்த பறவைகளை எரித்தது போல என்னையும் எரித்துவிடலாம் என்று பார்க்கின்றாயா?” என்று கேட்டார் அந்த அம்மா.

இவருக்கு தூக்கி வாரிப்போட்டது. “ஆற்றங்கரையில் நடந்தது உங்களுக்கு எப்படி தெரியும்?” என்று கேட்டார்.

அதுக்கு அந்த அம்மா சொன்னார். “என் கணவருக்கு சேவை செய்வது தான் என்னுடைய ஒரே தர்மம். அதனால் எங்கே என்ன நடந்தாலும் எனக்குத் தெரியும்!” என்றார்.

தேவசர்மா மலைத்துப் போய் நின்றார். அதுக்குப் பிறகு அந்த அம்மா இவருக்கு ‘அட்வைஸ்’ பண்ண ஆரம்பித்துவிட்டார்.

“இதோ பார்... உன்னுடைய தகப்பனார் இறந்து போன உடனே நீ உங்க ஊரைவிட்டு இங்கே ஓடி வந்துவிட்டாய்... உன்னுடைய தாய் அங்கே தனியா இருக்கிறார்களே.. அவரை யாரு கவனிக்கிறது? அநாதையாக இருக்கிற அந்த விதவைத் தாயாரை காப்பாற்றுவதை விட்டு விட்டு இங்கே ஓடிவந்துவிட்டு இப்படி பிச்சையெடுத்து வயிறு வளர்த்துக்கொண்டிருக்கிறாயே உனக்கு வெட்கமாக இல்லையா?

பத்து மாதம் சுமந்தவரை பரிதவிக்க விட்டுவிட்டு வந்திருக்கின்றாயே! என்ன நியாயம்?

நீ இப்போ செய்துகொண்டிருக்கின்ற தியானம், தவம் எதுக்கும் பிரயோசனமில்லை. எவனுடைய தாயார் கஷ்டத்திலே இருக்கின்றார்களோ அவனுடைய வாழ்க்கை வீண். எவன் ஒருத்தன் தன்னுடைய தாயாரைக் காப்பாற்றுகிறானோ, தாயார் சொல்கின்றபடி கேட்டு நடக்கின்றானோ அவன் செய்கின்ற எல்லா கர்மங்களும் இகலோகத்திலேயும் சரி பரலோகத்திலேயும் சரி நல்லதையே செய்யும். அதனாலே நீ உடனே உங்கள் ஊருக்குத் திரும்பிப் போ. உன்னுடைய தாயாரைக் காப்பாற்று! என்று புத்திமதி சொன்னார் அந்த அம்மா.

தேவசர்மா உடனடியான ஊருக்குத் திரும்பிப் போனார். தாயாரைக் காப்பாற்றினார். அதன்பின்பு அவருக்கு எல்லாம் நல்லபடியாக நடந்ததாம்.

இதுதான் அந்தக் கதை. இந்தக் கதையை இந்தகாலத்து பையன் ஒருத்தரிடம் சொன்னேன். சொல்லி முடித்துவிட்டு நீயும் உன்னுடைய அம்மாவையும் அப்பாவையும் காப்பாற்ற வேணும் என்று சொன்னேன். அதற்கு அவன் “நான் நிச்சயமாக என்னுடைய அம்மாவையும் அப்பாவையும் காப்பாற்றுவேன் சேர். ஆனால் அப்படி அவர்களை காப்பாற்றுவதிலே ஒரு சின்ன வித்தியாசம் உண்டு! என்றான்.

“என்னடா அது?” என்று கேட்டேன். “நான் அம்மாவை நேரடியாகக் காப்பாற்றுவேன்! அப்பாவை அம்மாவிடம் இருந்து காப்பாற்றுவேன்!” அப்படியென்றான் விபரம் தெரிஞ்ச பையன்!.



# சீனா - இந்தியாவின் புதிய பிரவேசமே தொண்டமானின் ஆதரவுக்குக் காரணம்

## ➤ டியூ குணசேகர சுட்டிக்காட்டு
## ➤ கோத்தாவின் வெற்றி உறுதியாம்

(கொழும்ப)

எல்பிட்டிய தேர்தல் பெறுபேறுகளின் மூலம் தெற்கில் கோத்தபாய ராஜபக்ஷ 65 வீதத்துக்கும் அதிக வாக்குகளைப் பெறுவது உறுதியாகியுள்ளது. அத்துடன் சீனா மற்றும் இந்தியாவின் புதிய பிரவேசமே தொண்டமானின் ஆதரவுக்குக் காரணமாகியுள்ளது.

இதன்மூலம் தேர்தலில் மலையகத்தில் பாரிய மாற்றம் ஏற்படும் வாய்ப்பு இருக்கின்றது என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

தேசிய பாதுகாப்புக்கு இராணுவத்தை மாத்திரம் பலப்படுத்தி செயற்படுத்த முடியாது. வெளிநாட்டுக் கொள்கையும் முக்கியமானதாகும். அமெரிக்க, சீனப் பொருளாதார யுத்தம் எமக்கும் பாதிப்பாகும். அதேபோன்று சீன ஜனாதிபதி தமிழ் நாட்டுக்கு வந்தபோது இந்திய பிரதமர் இருநாடுகளின் எல்லை தொடர்பாக தெரிவித்த கருத்து சீனாவின் விடயத்தில் அமெரிக்கா கடைப்பிடித்துவந்த கொள்கையில் இருந்து சற்று பின்வாங்க வைத்துள்ளது. இதனால் சீனா, இந்தியாவின் புதிய பிரவேசம் அமெரிக்கவாதிகளுக்கு பாரிய அச்சத்தையும் எமக்கு உறுதியையும் ஏற்படுத்தி இருக்கின்றது.

அத்துடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவு தங்களுக்குத்தான் கிடைக்கும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்து வந்தது. தொண்டமானின் ஆதரவு எங்களுக்குத்தான் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல காலையில் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஆனால் அன்றையதினம் மாலையில் ஆறுமுகன் தொண்டமான் தனது ஆதரவை கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வழங்குவதாக அறிவித்தார். தொண்டமானின் இந்த மாற்றமானது இந்திய, சீன் நாடுகளுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் புதிய பிரவேசத்தின் தாக்கமாகும்.

மேலும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தெற்கில் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு 65 வீதத்துக்கும் அதிக வாக்குகள் கிடைப்பது நிச்சயமாகும். எல்பிட்டிய தேர்தல் பெறுபேறு இதற்கு சான்றாகும்.

அதேபோன்று தொண்டமானின் ஆதரவின் மூலம் மலையகத்தில் பாரிய மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது. அத்துடன் வடக்கில் தமிழ் அரசியல் கட்சிகள் பிளவுபட்டுள்ளன. இதுவரை 6 அரசியல் கட்சிகள் எம்முடன் இணைந்து செயற்படுவதாக அறிவித்துள்ளன.

2015 ஜனாதிபதித் தேர்தலில் இவர்கள் அனைவரும் எமக்கு எதிராகச் செயற்பட்டவர்களாவர். அதனால் வடக்குத் தேர்தலில் இம்முறை பாரிய மாற்றத்தை எதிர்பார்க்கலாம். அந்த மாற்றம் எமக்குச் சாதகமாகவே அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





கண்ணன் கண்ணராசன் எழுதிய "சிந்தனைத் திடரில் சிதறிய துகள்கள்" மற்றும் பிறேமா (எழில்) எழுதிய "உருக்கி வார்த்த உணர்வுகள்" ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

# ஆறாவது கட்சியையும் இணைக்க 8 மணித்தியாலங்கள் முயற்சித்தோம்

## சுமந்திரன் விளக்கம்


(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைந்த முடிவுக்கான பயணத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் இணைப்பதற்காக சுமார் எட்டு மணித்தியாலங்கள் முயற்சித்தோம். ஆனால் எமது முயற்சி பயனளிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வருத்தம் தெரிவித்தார்.

யாழ்.பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் கலந்துரையாடல் ஆவணத்தில் கையொப்பமிட்டபின் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தொடர்பில் ஒருமித்த நிலைப்பாட்டினை வலியுறுத்தும் முயற்சியானது. வெற்றியளித்துள்ள நிலையில் ஒரு கட்சி மட்டும் குறித்த ஆவணத்தில் கையொப்பமிடாமல் வெளியேறியது.



குறித்த கட்சியால் முன்வைக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்புத் தொடர்பான கோரிக்கை வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலுக்கு அதி முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக கருத்தப்படாத நிலையிலும் ஏனைய ஐந்து கட்சிகளும் குறித்த விடயம் தொடர்பில் ஒரே நிலைப்பாட்டில் இருந்தமையால் ஆறாவது கட்சி தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்த நிலையில் தாங்களாகவே வெளியேறினர்.

குறித்த கட்சியை இணைத்துக் கொண்டு பயணிப்பதில் ஏனைய ஐந்து கட்சிகளும் மிகக் காத்திரமான பங்களிப்பை வழங்கிய நிலையில் அக் கட்சியால் முன்வைக்கப்பட்ட பல திருத்தங்களைச் செய்வதற்கும் இணக்கம் காணப்பட்டுத் திருத்தமும் செய்யப்பட்டது.

இருப்பினும் அவர்களால் ஏனைய கட்சிகளுடன் இணைந்து பயணிக்க முடியாத காரணத்தால் குறித்த ஆவணத்தில் கையொப்பமிடவில்லை.

குறித்த தமிழ்க் கட்சியை ஒன்றிணைப்பதற்கு இரு நாட்கள் சுமார் எட்டு மணித்தியாலங்கள் ஏனைய கட்சிகளும் பல்வேறு முயச்சிகளை மேற்கொண்ட போதும் முயற்சி கைகூடவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# ஜனாதிபதி ஆணைக்குழு ஹேமசிறிக்கு அழைப்பு

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் முன்னிலையாகுமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.


அரச வங்கி கணனி கட்டமைப்பை உருவாக்கும்போது இடம்பெற்ற பாரிய நிதி மோசடி தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காகவே அவருக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான வழக்கில் ஹேமசிறி பெர்னாண்டோ விளக்



கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், குறித்த வாக்குமூலத்தை பதிவு செய்வதற்கான அழைப்புக் கடிதத்தை, சிறைச்சாலைகள் அதிகாரிகள் ஊடாக அவரிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. (இ-7)





கோண்டாவில் சிவபூமி பாடசாலை ஆசிரியர் தின விழா சிவபூமி அறக்கட்டறைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

# அடிக்கடி திறனாய்வுக்குள்ளாகும் 13 வது திருத்தம் - பகுதி I

## எது சரி எது பிழை - ஒரு தொகுப்பு

12

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



| அட்டவணை-3 (1989 முதல்-2010 வரை) | | |
|---|---|---|
| நியதிச் சட்டங்கள் | மாகாணங்கள் | நியதிச் சட்டங்களின் எண்ணிக்கை |
| அபிவிருத்தி, சுய வேலை வாய்ப்பு, வேலை வாய்ப்பு நிறுவனம், மனித வளம் மற்றும் இயந்திர சாதனம் போன்ற அதிகார சபை உருவாக்க நியதிச் சட்டங்கள், தொழிற்றுறை அபிவிருத்தி, மீன் பிடித் துறை போன்றவற்றிக்கான நியதிச்சட்டங்கள். | வடமத்திய | 3 |
| | ஊவா | 1 |
| | தென் | 2 |
| | கிழக்கு | - |
| | மேல் | 1 |
| | மத்திய | - |
| | வடமேல் | 7 |
| | சப்ரகமுவ | 3 |
| | மொத்தம் | 17 |

| விடய இலக்கம் | மாகாண நிரலில் உள்ளவிடயங்கள் | வட மத்திய | ஊவா | தென் | கிழக்கு | மேல் | மத்திய | வடமேல் | சப்ரகமுவ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கலை,கலாசாரம் மற்றும் சமயம் | - | 4 | 1 | - | 2 | - | 1 | - | 8 |
| 2 | உல்லாசப்பயணத்துறை | - | - | 1 | - | 1 | - | - | - | 2 |
| 3 | தகவல் தொழில்நுட்பம் | - | - | - | - | 1 | - | - | - | 1 |
| | மொத்தம் | - | 4 | 2 | - | 4 | - | 1 | - | 11 |

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகள் பல நீக்கப்படுமா?**

2013 இல் அதிகாரப் பகிர்வும் 13 ஆவது திருத்தமும் மீண்டுமொருமுறை அரசியல் விவாதத்தின் மையத்திற்கு வந்திருந்தது. பல்வேறு காரணிகளின் விளைவாக இந்நிலைமை தோன்றியது. 2013 செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது வடமாகாண சபைத் தேர்தலே இதற்கு பிரதான காரணியாகும். அரசியலமைப்புச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வடமாகாண சபையானது தேசிய ஒருமைப்பாடு ஆபத்தை எதிர்கொள்ளும் என்பதே அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர்கள் முன்வைக்கின்ற வாதத்தின் கருப்பொருளாகவிருந்தது. இதனால் 2013 ஆம் ஆண்டில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகள் பலவற்றை திருத்துவதற்கு, (பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் இல்லாமல் செய்தல், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாண சபைகள் இணைந்து தனி மாகாண சபையாக இயங்க முடியும் என்ற ஏற்பாட்டை நீக்குதல், மாகாண சபை அதிகாரத்தின் கீழுள்ள பொதுப்பட்டியலில் உள்ள விடயங்களை திருத்துவதற்கு சகல மாகாண சபைகளிலும் அங்கீகரிக்க வேண்டும் என்பதை நீக்குதல்) அரசாங்கம் திட்டமிடுவதாகத் தெரிவிக்கும் பல ஊடக அறிக்கைகள் வெளிவந்து கொண்டிருந்தன.

இது சம்பந்தமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) ஊடக அறிக்கைகளை வெளியிட்டதோடு, அந் நிறுவனத்தால் வெளியிடப்படும் சமாதான நோக்கு என்ற இதழின் 2013 ஒகஸ்ட்–செப்டெம்பர் இதழை "13 செயலாக்கத்திற்கான சவால்கள்" என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தது. அதிலிருந்து தொகுக்கப்பட்டவையே கீழே தரப்படுகின்றன. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கு

**2013 இல், 13 ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் ஆகியவற்றை நீக்குதல், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாண சபைகள் இணைந்து தனி மாகாணசபையாக இயங்க முடியும் என்ற ஏற்பாட்டை நீக்குதல், மாகாண சபை அதிகாரத்தின் கீழுள்ள பொதுப்பட்டியலில் உள்ள விடயங்களை திருத்துவதற்கு சகல மாகாண சபைகளிலும் அங்கீகரிக்க வேண்டும் என்பதை நீக்குதல் போன்றவற்றை இல்லாமல் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.**

(CPA) என் நன்றி.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு திருத்தம் சம்பந்தமாக முன்னாள் வடக்கு மாகாண முதல் அமைச்சர் நீதியரசர். சி.வி.விக்கினேஸ்வரனிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் கூறிய பதில்களும். (இக் கேள்வி-பதில் அவர் முதலமைச்சர் வேட்பாளராக இருந்த போது 2013 இல் கேட்கப்பட்டவையாகும்).

**கேள்வி-** இனப் பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வுக்கு செல்வதென போர் நடந்த போதும், போர் முடிவடைந்தவுடனும் கூறப்பட்டது. ஆனால் அவர்கள் 13 ஆவது திருத்தத்தை செயலிழக்கச் செய்வதற்குத் தயாராவதாக தெரிகிறது. இந்த நிலைமையை நீங்கள் எவ்வாறு புரிந்து கொள்கிறீர்கள்? அது இந்தியா, இலங்கை மீது பலவந்தமாக திணித்தது என உங்களுக்குத் தோன்றுகிறதா?

**பதில்-** அதனை இந்தியா, இலங்கை மீது பலவந்தமாகத் திணித்தது எனும் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் அதிகாரப்பகிர்வு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இந்தியா ஈடுபட்ட வேளையில் உண்மையிலேயே 13 ஆவது திருத்த சட்ட வரைபு ஜே.ஆர். ஜெயவர்த்தன நிர்வாகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டது. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக குறிப்பாக வடக்கு-கிழக்குக்குரிய விடயங்கள் தொடர்பில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடான அழுத்தத்தினாலேயே 13 ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த வியூகத்துக்கு பதிலாக நாட்டின் ஏனைய மாகாணங்களில் அது அமுல்படுத்தப்பட்டது.

மிகவும் விவாதிக்கப்பட்ட சூழலில் நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களை விட இந்த அரசியலமைப்பு மேலும் முன் கொண்டு செல்லப்படவில்லை. இன்றுவரையும் 13 ஆவது திருத்தத்தினூடாக மாகாண சபைகளுக்குக்கிடைக்க வேண்டிய அதிகாரம் தொடர்பில் தெற்கிலுள்ள மாகாண சபைகள் அக்கறையேதும் காட்டவில்லை. தனித் தனி நபர்களாக அதிகாரத்தில் திளைப்பதற்குப் பதிலாக அதிகாரத்தை மத்தியில் வைத்துக் கொண்டிருப்பதா? இல்லையா? என்பதே கேள்வியாக இருக்க வேண்டும். கீழ் மட்டத்தில் தாக்கம் செலுத்தும் பிரச்சினைகள் அவர்களுக்கு மிகவும் இலகுவானதாகத் தெரியும்.

வடக்கில் மொழியில் தொடங்கி வாழ்வியல் முறை, பண்பாடு போன்றவை ஓரளவுக்கு வேறுபாடானது என்பதனால் அதிகாரம் கீழ் மட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட நிர்வாக அமைப்பு அந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தேவையானதாக உள்ளது. இவ்வாறான பிரச்சினைகளைக் கடுமையாக அடக்குவதன் மூலம் பிரச்சினை மேலும் தீவிரமடையும் என்பதை உண்மையிலேயே அரசாங்கம் இங்கு புரிந்து கொள்ள வேண்டிய விடயமாகும்.

**◆13 ஆவது திருத்தம் இந்தியா இலங்கை மீது பலவந்தமாக திணித்தது எனும் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.**

**◆பதின்மூன்றும் நீக்கப்பட்டால் தமிழ் மக்களுக்கு எதுவுமே மிஞ்சாது.**

**◆13 ஆவது திருத்தம் மட்டும் போதுமானதல்ல,இருப்பினும் கீழ் மட்டத்துக்கு கூடுதல் அதிகாரம் கிடைக்கக்கூடியவாறு ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள வரையறையற்ற அதிகாரத்தை குறைப்பதன் மூலம் அதனை ஏதாவதொரு முறையில் உருவாக்கிக்கொள்ளலாம்.**

**◆மாகாணங்கள் இரண்டும் சேர்க்கப்பட வேண்டும் எனும் கருத்திலேயே நான் இருக்கிறேன். 13 ஆவது திருத்தத்தின் நோக்கமானது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பிரச்சினையை தீர்ப்பதாகும். இவை வட மாகாண முன்னாள் முதல் அமைச்சரின் கருத்தாகும்.**

ஏனென்றால் தற்போது நிலவும் வன்முறைகள் தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லப்பட்டால் இன்னுமொரு ஆயுதப்போராட்டம் ஏற்படுவதனை தடுக்க முடியாமல் போகும்.

இதனால் இரு இனங்களுக்குமிடையில் பரஸ்பர நம்பிக்கையை உறுதிப்படுத்துதல் மிகவும் முக்கியமானதாக நான் கருதுகிறேன். தலைவர்கள் என்ற ரீதியில் ஏதாவதொரு தீர்வை நம்பிக்கை அடிப்படையில் முன்வைக்க முடிந்திருந்தால் எதிர்காலம் பற்றி எம்மால் சிந்திக்க முடியும். ஏதாவதொரு போர் மீண்டும் ஏற்பட்டால் அரசின் மீது அனுதாபம் ஏற்படாது என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய மேலுமொரு விடயமாகும். தமிழ் மக்களின் நலன் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக குறிப்பிட்டே அரசு இந்தியாவிடமும் சர்வதேச சமூகத்திடமும் போரை முடிப்பதற்கு உதவி கோரியது.


ஆனால் இன்று வரைக்கும் மேற்கொள்ளப்படாதிருப்பதும் அதுவே. சிலவேளை நான் தவறாகவும் இருக்கலாம். இருப்பினும் அரசு கடும் போக்காளர்களுடன் இணங்கி செயற்படுவதாக நான் நினைக்கிறேன். அவர்கள் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக குற்றம் சாட்டிக்கொண்டிருக்கும் போது தமிழ் மக்கள் அதனை எதிர்த்து நிலைமை மோசமானால் அரசு மிகவும் இலகுவாக 13 இல் பெரும்பாலான குறைகள் இருப்பதாகக் கூறி தமது கைகளைக் கழுவிக் கொள்ள முடியும்.


**நிறைவேற்று அதிகாரமுடையவராக உருவாக்கப்பட்டுள்ள ஆளுநரின் ஒத்துழைப்பின்றி எந்தவொரு சட்டத்தையும் நிறைவேற்ற முடியாதிருப்பது எதிர்நோக்கும் முக்கியமான சிக்கலாகும். இதுபோன்ற விடயங்களுக்கு மத்தியில் 13 ஆவது திருத்தம் பயனற்றதாகும். இருந்தபோதிலும் அதனையும் விட்டால் தமிழ் மக்களுக்கு எதுவுமே இல்லாமல் போகும். அதனால்தான் தமிழ் கூட்டமைப்பு அந்த தலைப்பின்கீழ் போட்டியிடுகிறது. இதுவரைக்கும் வடக்கில் எந்தவொரு ஜனநாயக நிறுவனமும் இல்லாதிருப்பதனால் அவ்வாறான நிறுவனமொன்றை உருவாக்குவதற்காக 13 ஆவது திருத்தத்தின்கீழ் இடமளிக்குமாறு கோருவதே எனது வாதமாகும். அதன்பின்னர் ஒலிவர் டிவிஸ்ட் (Oliver Twist) போன்று அதிகமானவற்றை எம்மால் கோர முடியும்.**

நிறைவேற்று அதிகாரமுடையவராக உருவாக்கப்பட்டுள்ள ஆளுநரின் ஒத்துழைப்பின்றி எந்தவொரு சட்டத்தையும் நிறைவேற்ற முடியாதிருப்பது எதிர்நோக்கும் முக்கியமான சிக்கலாகும். இதுபோன்ற விடயங்களுக்கு மத்தியில் 13 ஆவது திருத்தம் பயனற்றதாகும். இருந்தபோதிலும் அதனையும் விட்டால் தமிழ் மக்களுக்கு எதுவுமே இல்லாமல் போகும்.

அதனால்தான் தமிழ் கூட்டமைப்பு அந்த தலைப்பின்கீழ் போட்டியிடுகிறது. இதுவரைக்கும் வடக்கில் எந்தவொரு ஜனநாயக நிறுவனமும் இல்லாதிருப்பதனால் அவ்வாறான நிறுவனமொன்றை உருவாக்குவதற்காக 13 ஆவது திருத்தத்தின் கீழ் இடமளிக்குமாறு கோருவதே எனது வாதமாகும். அதன்பின்னர் ஒலிவர் டிவிஸ்ட் (Oliver Twist) போன்று அதிகமானவற்றை எம்மால் கோரமுடியும்.

தொடரும்...





நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய கப்பல் திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் நாகேஸ்வரப் பெருமான் பரிவார மூர்த்திகளுடன் வீதிவலம் வருவதையும் சரித்திரப் பிரசித்தி பெற்ற கப்பல் ஆட்டும் வைபவம் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-மகாலிங்கம்)

## சர்வதேச முதியோர், சிறுவர் தினம்


(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றாற்றல் உடையோர் தின விழா அண்மையில் நல்லூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டார். இதில் கலந்து கொண்டவர்களுக்கு அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன. (இ-5)

## கோத்தாவுக்கு எதிரான வழக்கு விசாரணைகள் மீள ஒத்திவைப்பு

(கொழும்பு)



டீ.ஏ.ராஜபக்ஷ நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அமைப்பதற்கு அரச நிதியைப் பயன்படுத்தியதாகத் தெரிவித்து முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக கொழும்பு விசேட மேல் நீதிமன்றில் இடம்பெறும் வழக்கு விசாரணைகள் நேற்றுப் பிற்போடப்பட்டன.

அதற்கமைய குறித்த வழக்கு விசாரணைகள் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வரையில் பிற்போடப்பட்டுள்ளதாக விசேட மேல் நீதிமன்றம் தெரிவித்தது.

வீரகெட்டிய, மெதமுலன டீ.ஏ. ராஜபக்ஷ ஞாபகார்த்த கோபுரம் மற்றும் நூதனசாலை நிர்மாணப் பணிகளுக்காக 33.9 மில்லியன் ரூபாய் அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தியமை உள்ளிட்ட 7 குற்றச்சாட்டுக்களின் கீழ் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக, மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் கோத்தபாய ராஜபக்ஷவால் தாக்கல் செய்யப்பட்ட விசேட மேன்முறையீட்டு மனுவை, உயர் நீதிமன்ற நீதியரசர்களான எல்.டி.பி.தெஹிதெனிய, எஸ்.துரைராஜா மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் விசாரித்து வருகின்றனர்.

இதேவேளை, இதற்கு முன்னதாக இலங்கைக் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 33.9 மில்லியன் ரூபாய் நிதியை நம்பிக்கை மோசடி செய்தமை தொடர்பாக கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் நிரந்தர விசேட மேல் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 5 துப்பாக்கிகளுடன் பெண் கைது

(பதுளை)

ஐந்து துப்பாக்கிகளுடன் பெண் ஒருவரை பதுளை ரிதிமாலியத்த பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

பதுளைப் பகுதியின் ரிதிமாலியத்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து ரிதிமாலியத்தையை அண்மித்த பகுதியிலுள்ள வீடொன்றினை சுற்றிவளைத்து தேடுதல்களை மேற்கொண்டிருந்தனர். இதன்போதே துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதுடன் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டார். இத்துப்பாக்கிகள் அனைத்தும் அனுமதிப்பத்திரமற்ற சட்டவிரோதமானவைகள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## உலக இருதய மீள் இயக்க நாள் இன்று




### சோதித்தல்

- பாதிக்கப்பட்டவரை அணுகுவதற்கு உங்களுக்கு பாதுகாப்பு இருக்கின்றதா? என உறுதி செய்யவும்.
- பாதிக்கப்பட்டவர் நினைவுடன் இருக்கின்றாரா? என சோதித்துப்பார்க்கவும்.
- தலையை நிமிர்த்துங்கள். நாடியைப் பிடித்து உயர்த்துங்கள்.
சுவாசம் இருக்கின்றதா? எனச் சோதிக்கவும்.
- சுவாசம் இல்லாவிடின் அல்லது சுவாசம் அசாதாரணமாக இருப்பின் இருதய சுவாச மீள் இயக்கும் செயல் அவசியம்.

### அழைத்தல்

- அவசர மருத்துவ சேவையினை அழையுங்கள். அறிவுறுத்தலின் படி செயற்படுங்கள்.
- வேறுயாராவது அழைப்பை ஏற்படுத்த இருந்தால் அவரை அழைப்பை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுங்கள்.
- இதயத்துக்கு அழுத்தம் கொடுப்பது உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியம்.
- இருதயத்துக்கு அழுத்தம் கொடுப்பதை தாமதிக்கவோ அல்லது இடைநிறுத்தவோ வேண்டாம்.

### அழுத்தம் கொடுத்தல்

- இரு கைகளையும் நடு நெஞ்சின் மேல் வையுங்கள்.
- நெஞ்சை 5-6 cm அளவு கீழே செல்லக்கூடியதாகவும் ஒரு நிமிடத்துக்கு 100-120 தடவையும் அழுத்துங்கள்.
- நீங்கள் வாயினால் செயற்கை சுவாசம் கொடுக்க முடியுமானால் ஒவ்வொரு 30 இருதய அழுத்தத்திற்குப் பிறகு 2 தடவை செயற்கை சுவாசம் கொடுங்கள். அல்லது தொடர்ந்து இருதயத்திற்கு அழுத்தத்தைக் கொடுங்கள்.
- கடினமாகவும் விரைவாகவும் அழுத்தத்தைப் பிரயோகிக்கவும். ஏதாவது தீங்கு விளையும் எனக் கவலையடையத் தேவையில்லை.
- தானியங்கி இருதயத் துடிப்பு ஒழுங்காக்கி கிடைக்குமானால் உடனடியாக அதனை இயங்கச் செய்து அதன் அறிவுறுத்தலின்படி செய்யவும்.
- அவசர மருத்துவப் பிரிவு வந்தவுடன் அவர்கள் உங்களை நிறுத்தவும் எனச் சொல்லும் வரை தொடர்ந்து இருதய அழுத்தத்தைக் கொடுக்கவும்.
- உயிர்களைக் காப்பாற்றுவதற்கு ஏதாவது செய்வது எப்பொழுதும் மேன்மையானது.

உலக இருதய மீள் இயக்க நாளை முன்னிட்டு இருதய நிறுத்தம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல் நிகழ்வு இன்று காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை யாழ். கார்கில்ஸ் சதுக்கத்தில் இடம்பெறும்.

இருதய மீள் இயக்கப்பிரிவு,
யாழ்.போதனா வைத்தியசாலை.

## சர்வதேச மனநல தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம்








(கல்முனை)

சர்வதேச மனநல மற்றும் உளவளத்துணை தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலமொன்று கல்முனையில் இடம்பெற்றது. கல்முனை ரோயல் வித்தியாலய அதிபர் எம்.எச்.எம்.அன்சார் தலைமையில் குறித்த விழிப்புணர்வுப் பேரணி நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (இ-7)

# தேர்தல் விஞ்ஞாபனங்களை மையப்படுத்தி அறிவுபூர்வமான தீர்மானத்தை மேற்கொள்க

## மக்களிடம் சபாநாயகர் வேண்டுகோள்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஒவ்வொரு வேட்பாளரினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களை மையப்படுத்தி பொதுமக்கள் யாருக்கு வாக்களிப்பது என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கும்சபாநாயகர் கரு ஜெயசூரிய, வேட்பாளர்களும் நடைமுறைச் சாத்திய மான தேர்தல் விஞ்ஞாபனங்களை முன்வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தல் திகதி நெருங்கும் நிலையில் யாருக்கு வாக்களிப்பது என்பதை மக்கள் நன்கு சிந்தித்துத் தீர்மானிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் வகையில் சபாநாயகர் கரு ஜெய சூரிய தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

"எதிர்வரும் தேர்தலில் வாக்காளர்கள் வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அடிப்படையாகக் கொண்டு, அறிவுபூர்வமான தேர்வுகளை மேற்கொள்வது அவசியமாகும்.

வேட்பாளர்களும் தெளிவானதும், அடையக்கூடியதுமான இலக்குகளுடன் தேர்தல் விஞ்ஞாபனங்களை முன்வைப்பார்கள் என்று நான் பெரிதும் எதிர்பார்க்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை பாதுகாப்புச் சபையின் வடமாகாண கௌரவிப்பு நிகழ்வு







(யாழ்ப்பாணம்)

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் யாழ்.மாவட்ட சமூக பாதுகாப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வடமாகாண கௌரவிப்பு நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் சமூக பாதுகாப்புச் சபையின் இணைப்பாளர் எஸ். பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கை பாதுகாப்புச் சபையின் தலைவர் கலந்து கொண்டார். இதில் மாவட்ட அரச அதிபர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இதில் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் அதி கூடிய பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் புலமைப்பரிசிலும் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

வடமாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 12 ஓய்வூதியப் பயனாளிகளுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.

இத்திட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்திய உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வும் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் சிறப்பாகக் கடமையாற்றியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

அதேவேளை 2017 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் கௌரவிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சமூக பாதுகாப்புச் சபையில் சிறந்த சேவை யாற்றிய பிரதேச செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (இ-101)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1859

### குணன்




### ருகுணாஸ்



காதலில்லாமல் நட்பு வந்ததா சரித்திரம் பல இருக்கு. நட்பில்லாமல் காதல் வந்ததா சரித்திரம் இல்லை. நண்பேன்டா!!

### பானு

அப்பா, அம்மா அடிச்சா வலிக்கும் டீச்சர் அடிச்சா வலிக்கும் ப்ரெண்ட் அடிச்சா வலிக்கும்



சைட் அடிச்சா வலிக்குமா?

### சசி

தலை சிறந்த வலி நிவாரணி...



தட்டு நிறைந்த பிரியாணி...

### கவிசனா

பொண்ணுங்க ரக்ஷா பந்தனுக்கு ராக்கி கட்டி நம்மள அண்ணனாக்கும் போது...



நாம ஏன் Lovers Day-ல பிடிச்ச பொண்ணுங்களுக்கு தாலி கட்டி பொண்டாட்டி ஆக்கிக்கக்கூடாது

### றோசி

ரிவி ரிமோட் தரமுடியாதுன்ன சொன்ன தங்கச்சி தலையில் இரண்டு கொட்டு கொட்டினேன். அவ கொஞ்சம் கூட அழவே இல்ல, ஏன்னு கேட்டா அப்பா 7.30 க்கு தான் வருவாரு. அதனால நான் 7.20 க்கு அழுவேன்னு சொல்லுறா



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கோத்தாவின் பரப்புரை விளம்பரத்துடன் இராணுவத் தளபதிக்குத் தொடர்பில்லை

## இராணுவப் பேச்சாளர் விளக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரை விளம்பரத்துக்கு இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவின் ஒளிப்படம் மற்றும் கருத்து பயன்படுத்தப்பட்ட விடயத்துடன், இராணுவத் தளபதி எந்த விதத்திலும் தொடர்புபடவில்லை என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்த கருத்தைப் பயன்படுத்தி பிரசார



நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவருக்கு எதிராக தேர்தல் வன்முறையை கண்காணிக்கும் மையம் முறைப்பாடு செய்தது.


இந்நிலையில் இந்த விடயம் குறித்து கருத்து வெளியிடும் போதே இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா 2009 ஆம் ஆண்டு வெளியிட்ட கருத்து, அவருக்குத் தெரியாமல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அவரது அறிக்கை மற்றும் ஒளிப்படம் இந்தப் பரப்புரைக்குப் பயன்படுத்தப்பட்டதை இராணுவத் தளபதி அறிந்திருக்கவில்லை.

அவருடன் ஆலோசிக்கப்படாததால் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# போதைப் பொருட்களுடன் மூவர் கைது



(திருகோணமலை)

திருகோணமலை நகர் மற்றும் அலஸ்தோட்டம் பகுதியில் போதைப் பொருட்களுடன் நேற்று முன்தினம் மூவரை கைதுசெய்ததாக திருகோணமலை மாவட்ட பிராந்திய விஷத்தன்மையுடைய போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

திருகோணமலை துறைமுகப் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசமான நீதிமன்ற சந்தியில் வைத்து மூதூர்-4, பெரிய பாலத்தைச் சேர்ந்த 44 வயதுடைய ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் சோதனை செய்த போது அவரிடமிருந்து 62 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட தொடர் விசாரணையின் அடிப்படையில் நீதிமன்ற வீதியில் 63 வயது நபர் கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து 63 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அலஸ்தோட்டம் பகுதியில் முல்லேரியா, கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட 42 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டதாகவும் கைது செய்யப்பட்ட நபர் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுபவர் எனவும் அவரிடமிருந்து ஐஸ் போதைப்பொருள் 85 மில்லிகிராமும் 5 கிராம் கேரளக் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

நீதிமன்ற வீதியில் கைது செய்யப்பட்ட இரண்டு நபர்களையும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களையும் துறைமுகப்பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் அலஸ்தோட்டத்தில் கைதுசெய்யப்பட்ட நபரையும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களையும் தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் திருகோணமலை மாவட்ட பிராந்திய விஷத்தன்மையுடைய போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (இ-7)



கைதடி பராசக்தி பாலர் பகல் இல்லத்தின் ஆசிரியர் தின விழா கடந்த வெள்ளிக்கிழமை நாவற்குழி மகா வித்தியாலய ஆசிரியர் திருமதி. சிவலோஜனி கிருஷ்ணமூர்த்தி தலைமையில் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கணக்காளர் திருமதி. வசந்தமாலா மனோகரன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள் கொடிகாமச் செய்தியாளர்)

# செய்தித்துளிகள்

## லோகேஸ்வரனுக்கு "கலைச்சுடர்" விருது

(சம்மாந்துறை)



லக்ஸ்டோ மீடியா, நெட்வேர்க் ஸ்ரீலங்கா ஆர்.கே.மீடியா, இலங்கை எழுத்தாளர் சங்கத்துடன் இணைந்து சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் அண்மையில் நடத்திய திறமைக்கான தேடல் விருது வழங்கும் விழாவில் கல்வி, கலை இலக்கிய, ஊடகத்துறை சமூகசேவை பங்களிப்புக்காக பல்துறை கலைஞர் டாக்டர்.கலைமாமணி கந்தப்பு லோகேஸ்வரனுக்கு "கலைச்சுடர்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (இ)

## மெத்தை தொழிற்சாலையில் தீ

(பாணந்துறை)

பாணந்துறை-நல்லுருவ பிரதேசத்திலுள்ள மெத்தை உற்பத்தி தொழிற்சாலையில் நேற்றுக் காலை தீப்பரவல் ஏற்பட்டது,

குறித்த தீ விபத்தின் காரணமாக மேற்படி தொழிற்சாலை பெரிதும் சேதமடைந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மொரட்டுவ மற்றும் களுத்துறை தீயணைப்புப் படையினர் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் தெரிவித்தது. (இ-7)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் குருநகர் கலையரங்க மண்டபத்தில் கி.அல்போன்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக யூலியஸ் சகாயராசா, செயலாளராக சி.றெக்ஸ், பொருளாளராக கி.செறிங்ரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-5-106)

## மிகச் சிறந்த விமான சேவையாக ஸ்ரீலங்கன் விமான சேவை தெரிவு

(கொழும்பு)

இந்து சமுத்திரத்தின் மிகச் சிறந்த விமான சேவையாக ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது.

சிங்கப்பூர் எயார்லைன்ஸ் கத்தே பசுபிக் மலேசியா எயார்லைன்ஸ் போன்ற சர்வதேச தரம் வாய்ந்த விமான சேவைகளைப் பின்னுக்குத்தள்ளி ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் இந்த இடத்தைத் தக்க வைத்தது. (இ-7)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 260 | 200 | 240 | 300 |
| தக்காளி | 200 | 140 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 80 |
| கோவா | 140 | 150 | 120 | 160 |
| கரட் | 120 | 140 | 120 | 160 |
| பூசணி | 100 | 80 | 100 | 100 |
| புடோல் | 160 | 180 | 120 | 140 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 220 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 240 | 260 | 200 | 240 |
| பாகற்காய் | 260 | 450 | 280 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 90 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 160 | 200 | 150 | 160 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 160 |
| பீற்றூட் | 100 | 100 | 90 | 100 |
| கறிமிளகாய் | 240 | 180 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 160 | 200 |
| போஞ்சி | 240 | 180 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | — | 80 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 300 | 350 | 280 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 28-40 | 30-50 |
| இராசவள்ளி | 300 | — | 400 | — |
| வெங்காயப்பூ | 300 | 180 | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | — | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | 60 | 80 |

# சிறுவர் அரங்கம்

## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2019

# நாயும் ஓநாயும்


சுதந்திரத்தின் விலை மதிப்பற்றது.

பசியால் வாடி மெலிந்த ஓநாய் தின்பதற்கு ஏதாவது அகப்படுமா என்று தேடிக்கொண்டு காடு முழுவதும் சுத்தியது. அப்பொழுது புஷ்டியான ஒரு நாய் குஷியாக எதிரே ஓடி வந்தது. அந்த நாயைத் தின்றுவிடலாமா என்று ஓநாய் யோசித்தது. ஆனால் தான் அப்பொழுது இருந்த மெலிவான நிலையில் அந்த நாயுடன் சண்டைபோட்டுத் தோற்கடிக்க முடியுமா என்பது சந்தேகமாய் இருந்தது. அதனால் அதனுடன் நட்பாய்ப் பேச ஆரம்பித்தது. நாயின் புஷ்டியையும் அழகையும் புகழ்ந்தது. புகழ்ச்சியைக் கேட்டு மகிழ்ந்த நாய் ஓநாயைப் பார்த்து "நண்பனே, நான் சொல்லுகிறபடி செய்தால் நீயும் என்னைப் போல சௌக்கியமாய்ப் புஷ்டியுடன் இருக்கலாம். பசியாலும் பட்டினியாலும் இந்தக் காட்டில் இருந்து ஏன் கஷ்டப்படுகிறாய்?என்னுடன்வெளியே வந்துவிடு. நல்ல தீவனம் உனக்குக் கிடைக்கும்'' என்று சொன்னது.

ஓநாய்: "அப்படியானால் நான் என்ன வேலைசெய்ய வேண்டும்''

நாய்: "வேலையாவது கீலையாவது ஒன்றும் கிடையாது. வீட்டுக்கு வருகிற பிச்சைக்காரர்களை விரட்டியடிக்க வேண்டும். வீட்டுக்காரர்களைப் பார்த்தால் வாலை ஆட்டிக் குலைக்க வேண்டும். அவ்வளவுதான் அப்போது நமக்கு விதவிதமான உணவுகள் கிடைக்கும். பிரியமாக நமது தலையை வீட்டுக்காரர்கள் தடவிக் கொடுப்பார்கள். என்ன சௌக்கியம் தெரியுமா?''

நாய் செய்த வர்ணனையைக் கேட்டு ஓநாய் சொக்கிப் போயிற்று. நாயுடன் காட்டைவிட்டு நாட்டுக்குப் போகச் சம்மதித்தது. இரண்டும் புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தன. போகும்போது நாயின் கழுத்தில் இருந்த கறுப்பு வாரைக் காட்டி ''என்ன அது?'' என்று ஓநாய் கேட்டது.

நாய்: ''அது ஒன்றுமில்லை''

ஓநாய்: "ஒன்றுமில்லை என்றால் அது எப்படி ஏற்பட்டது?''

நாய்: "என்னைக் கட்டிப் போடும்போது கழுத்தில் மாட்டுகிற சங்கிலியால் ஏற்பட்ட வாரை. அவ்வளவுதான்.'

ஓநாய்: "கட்டிப் போடுகிறார்களா? அப்படியானால் உன் இஷ்டப்படி எப்பொழுது வேண்டுமானாலும் வெளியே போக முடியாதா?''

நாய்: ''எப்பொழுதும் போக முடியாது. அது என்ன பிரமாதம்?''

ஓநாய்: ''பிரமாதமா? அதுதான் எனக்குப் பெரிய காரியம். எப்பேர்ப்பட்ட வாழ்வாய் இருந்தாலும் சரி என் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க மாட்டேன். வீட்டில் அகப்பட்டு விதவிதமான உணவுகளைச் சாப்பிடுவதை விடப் பட்டினியாகச் சுதந்திரமாகக் காட்டில் அலைவதே மேல். நான் போகிறேன்.''

இந்த விதமாகச் சொல்லிவிட்டுக் காட்டைப் பார்த்து ஓடியது ஓநாய்.

## ஏனோ கோபம்?



அண்ணா, அண்ணா ஓடிவா
அருமை அண்ணா ஓடிவா
அண்ணா நீயும் நில்லாமல்,
அருகில் கொஞ்சம் ஓடிவா.

என்னுடன் ஆடிப் பாடவே
எங்கும் சுற்றிப் பார்க்கவே
உன்னை நானும் அழைக்கிறேன்,
உள்ளம் கொண்டு ஓடிவா.

சின்ன வீடு கட்டிடுவோம்
சிறிய பொம்மை செய்திடுவோம்
என்ன அண்ணா நீயங்கே
எழுதிக் கொண்டு இருக்கிறாய்?

தங்கை மனமும் நோகுதே
தயவாய் இங்கே ஓடிவா
எங்கே இன்னும் வரவில்லை,
ஏனோ கோபம் என்மீதே!

## செருப்பின் தன்னடக்கம்

அறையில் குப்பைத் தொட்டியும் துடப்பமும் ஒன்றையொன்றுப் பார்த்துக் கொண்டன.

"குப்பைத் தொட்டியே! இந்த அறையானது என்னால் தான் சுத்தமாகயிருக்கின்றது! நம் எஜமானருக்கு சொந்தமான இந்த அறையினை நான் தான் தினமும் கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்கிறேன். அதனால் உன்னை விடவும் நான் உயர்ந்தவன்'' என்றது துடைப்பம்.

"துடைப்பமே! பேசாதே! நீ என்னதான் இந்த அறையினை கூட்டிப் பெருக்கிட உதவி செய்தாலும் நம் எஜமானார் என் மீதுதான் குப்பைகளை எல்லாம் போட்டு நிரப்புகின்றார். எனவே நான்தான் அந்தக் குப்பைகளை எல்லாம் சுமந்து கொண்டிருக்கின்றேன். எனவே நானே உன்னை விடவும் உயர்ந்தவன்!'' என்றது குப்பைத் தொட்டி.

இதனை எல்லாம் அறையின் மேலே தொங்கிக் கொண்டிருந்த மின்விசிறியானது கவனித்துக்கொண்டிருந்தது.

உடனே அது "நண்பர்களே! நீங்கள் இருவரும் உங்கள் எஜமானருக்கு நன்றாக உழைப்பதாகப் பேசிக் கொள்கின்றீர்கள்! ஆனால்எஜமான்வெளியே செல்லும் நேரமெல்லாம் அவரை சுமந்து செல்கின்ற செருப்பினை மறந்து விட்டீர்கள்.

செருப்பு வெளியே கழட்டி விடப்பட்டிருக்கிறது என்பதற்காக அது உங்கள் பார்வையில் படவில்லை போலும்! எப்போதுமே உழைக்கத் தெரிந்தவர்கள்உங்களைப்போன்று தற்பெருமைப் பேசிட மாட்டார்கள்.

அவர்கள் மற்றவர்களின் பார்வைக்கு சற்றுத் தூரத்தில் தான் தெரிவார்கள்'' என்றது.

துடைப்பமும் குப்பைத் தொட்டியும் வாசலுக்கு வெளியே கிடந்த செருப்பைப் பார்த்தன.

அது தன்னடக்கத்துடனும் அமைதியுடனும் காணப்பட்டது.

துடைப்பமும் குப்பைத் தொட்டியும் தங்கள் தவறை உணர்ந்து வெட்கத்தால் தலை குனிந்தன.

**கருத்து:- உழைப்பாளிகள் தங்களைத் தாமே பெருமைப்படுத்திக் கொள்ளமாட்டார்கள்.**

தொகுப்பு:-கொக்குவில் பொது நூலகம்

கிடைத்திருக்கும் வாய்ப்புகளைத் திறம்படப் பயன்படுத்துகிறவனே உண்மையான பெருமைக்குச் சொந்தக்காரன். – தியோடர் ரூஸ்வெல்ட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# பிராயச்சித்த அபிசேகமாக யாரும் ஆக்கிவிடாதீர்கள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் ஐந்து தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு பொதுவான கோரிக்கை அடங்கிய ஆவணமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இவ்வாறு கைச்சாத்திடுவதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உடன்படவில்லை. சில கருத்துக்களைத் தாம் முன்னிலைப் படுத்தியதாகவும் எனினும் அவற்றைப் பிரஸ்தாப ஆவணத்தில் குறித்துரைப்பதற்கு உடன்படாத கட்டத்தில் தம்மால் குறித்த ஆவணத்தில் கையொப்பமிட முடியவில்லை என்றும் முன்னணியினர் தமது பக்க நியாயத்தை அறிக்கைப்படுத்தியுள்ளனர்.

இவற்றின் மத்தியில் ஆட்சியாளர்களுடன் சேர்ந்து சென்று தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், எல்லாவற்றையும் போட்டுடைத்தவர்களுக்கு இந்த ஆவணம் பிராயச் சித்த அபிசேகமாக அமைந்துவிடக் கூடாது என்பதில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பது பொதுவான கருத்தாக எழுந்துள்ளது.

தவிர, ஐந்து தமிழ்க் கட்சிகள் இணைந்து கையொப்பமிட்ட கோரிக்கைகள் தொடர்பில் உடன்படுகின்ற ஜனாதிபதி வேட்பாளரை தமிழ் மக்கள் ஆதரிப்பது என்ற விடயத்தில் தமிழ் மக்களின் கருத்துக்களையும் அறிகின்ற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகள் ஒப்பமிட்டுவிட்டனர் என்பதற்காக அதுவே தமிழ் மக்களின் தீர்மானம் என்றோ அல்லது தமிழ் மக்களின் நிலைப்பாடென்றோ அனுமானித்துவிட முடியாது.

எனவே வாக்களித்தல் என்ற வகையில் ஏதோவொரு பொறிமுறை ஊடாகத் தமிழ் மக்களின் கருத்தியலை, எண்ணப்பாட்டை அறிந்து அதனையும் உள்வாங்குவது கட்டாயமானது.

இவை ஒருபுறமிருக்க, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களைச் சந்தித்து மேற்படி கோரிக்கைகளை தெரியப்படுத்துதல் என்ற விடயத்தில், ஐந்து அரசியல் கட்சித் தலைவர்களும் சந்திப்பில் கலந்து கொள்ள வேண்டும் என்பதுடன்,

எந்தக் கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளர்களைத் தனித்துச் சந்திக்க முடியாது என்ற நிபந்தனையும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

அதேவேளை ஜனாதிபதி வேட்பாளர்களை ஐந்து தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும் ஒன்றாகச் சந்திக்கும்போது, அந்தச் சந்திப்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் தமிழ் மக்கள் பேரவையால் நியமிக்கப்பட்ட சுயாதீனக்குழுவின் பிரதிநிதிகளும் இடம்பெறுவது மிக மிக அவசியமானது.

இவ்வாறான பிரசன்னம் வெளிப்படைத் தன்மைக்கும் நம்பகத்தன்மைக்கும் தேவையானது.

இதற்கு மேலாக, தமிழ் மக்கள் சார்பாக தமிழ் அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதி வேட்பாளர் எவரும் உடனடியாகத் தயாரில்லை என்றால், அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது பற்றி ஆராய்வதும் அவசியம்.

இல்லையேல் எல்லாம் அர்த்தமற்றதாகிப் போய்விடும்.

தனியார் தொலைத் தொடர்பு கோபுரம்

# வலி.வடக்கில் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் தனியார் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பதற்குப் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையில் வலி.வடக்குத் தவிசாளர் அனுமதி வழங்கியமைக்கு அப் பகுதி மக்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதேச சபை வளாகத்துக்குள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வலி.வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட இளவாலை ஆலடிக் கிராமத்தில் பொது மக்களின் விருப்பங்களை அறியாது வலி.வடக்குத் தவிசாளர் தன்னிச்சையாக தனியார் நிறுவனம் ஒன்றிற்குத் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்க அனுமதி வழங்கியமை அப்பகுதி மக்களிடையே பல சந்தேகங்களை உருவாக்கியுள்ளது.

கடந்த 8 ஆம் மாத பிரதேச சபை அமர்வில் குறித்த தனியார் நிறுவனத்தின் கோபுர அமைப்புத் தொடர்பாகப் பொதுமக்கள் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையிலும் குறித்த வட்டாரங்களை சேர்ந்த உறுப்பினர்களின் அறிவுறுத்தலுக்கமையவும் கூட்டம் இடம்பெற்றது.

அக் கூட்டத்தில் குறித்த கோபுரம் அமைப்பது தொடர்பில் அப் பகுதி மக்களுடன் கலந்துரையாடி சாதகமான முடிவைப் பெற்ற பின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிப்பது என்றும் அதுவரை புனரமைப்புப் பணிகளைத் தற்காலிகமாக நிறுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை குறித்த தனியார் நிறுவனத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து பிரதேச சபையை முற்றுகையிட்டனர்.

இச் சம்பவம் தொடர்பில் வலி வடக்குத் தவிசாளர் எஸ்.சுகிர்தனைத் தொடர்பு கொண்ட போது குறித்த கோபுரம் அமைப்பதற்கு தவிசாளர் மட்டும் அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவித்ததோடு குறித்த திட்டம் தொடர்பில் குறித்த நிறுவனத்தை பொது மக்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-10)

ஐ.எஸ் உடன் தொடர்பு

# இந்தியாவில் 127 பேர் கைது

(கொழும்பு)

ஐ.எஸ் அமைப்புடன் தொடர்பு வைத்திருந்த குற்றச் சாட்டில் இந்தியாவில் 127 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர் என இந்திய தேசிய புலனாய்வு அமைப்பின் தலைவர் அலோக் மித்தல் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சஹரான் ஹாசிமின் வீடியோக்களை அடிப்படையாகக் கொண்டே குறித்த 127 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-3)

# மீசாலை கிழக்குப் பகுதியில் டெங்கு நோய்த் தாக்கம்

## அவதானமாக இருக்க அறிவுறுத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -மீசாலை கிழக்குப் பகுதியில் டெங்குத் தாக்கம் ஏற்பட்டிருப்பதாக சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். டெங்குக் காய்ச்சல் ஏற்பட்ட இரு நோயாளர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து நேற்று செவ்வாய்க் கிழமை சுகாதாரப் பிரிவினர் மீசாலை கிழக்கு பகுதிக்கு சென்று பார்வையிட்ட போது அங்கு பெருமளவான வீடுகளில் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான சூழல் காணப்படுவதாகத் தெரிவித்தனர். அண்மையில் பெய்த மழை காரணமாக டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்து இருப்பதாகவும்எனவே பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-5-30)

# உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் தொடர்பில் 65 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவிற்கு இதுவரையில் 65 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகளில், கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை செய்த முறைப்பாடும் உள்ளடங்குவதாக ஆணைக் குழுவின் செயலாளர் எச்.எம். பி.பி. ஹேரத் தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள், இந்த வார இறுதியில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இன்று புதன் கிழமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் இணைந்து இது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தவிர, குறித்த முறைப்பாடுகளை நேரடியாகப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்த நிலையில், தபால் மூலம் வரும் முறைப்பாடுகள் மாத்திரம் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவித்தார்.

இதுதொடர்பிலான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள், கடந்த 4 ஆம் திகதி முதல் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நூலக வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் நூலக வாரம் இடம்பெறும் எனப் பாடசாலையின் அதிபர் இரா.ஜெயக்குமார் தெரிவித்தார்.

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இடம்பெறும் இந்நிகழ்விற்கு யாழ்.பொது நூலகம் அனுசரணை வழங்கியுள்ளது. (இ-10)

# தபால் வாக்களிப்பு - வாக்காளர் அட்டைகள் 18 ஆம் திகதி திணைக்களத்திடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டைகள் நாளை மறுதினம் 18 ஆம் திகதி தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும்.

அந்தவகையில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களில் இருந்து தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் பணி பூர்த்தி செய்யப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் திட்டப்பணிப்பாளர் சன்ன பி.டி.சில்வா தெரிவித்தார்.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக 7 இலட்சம் பேர் விண்ணப்பித்தனர்.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்தவர்கள் தமது வாக்குகளை இம் மாதம் 31 ஆம் திகதியும் நவம்பர் மாதம் முதலாம் திகதியும் வாக்களிக்க முடியும்.

மேலும் குறிப்பிட்ட இரண்டு தினங்களில் வாக்களிக்க முடியாதோர் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி அருகிலுள்ள தேர்தல் தெரிவு அத்தாட்சி அலுவலகத்தில் வாக்களிக்க முடியும். தேர்தல் ஆணைக்குழுவைச் சேர்ந்த ஊழியர்கள் 4 ஆம் திகதி தபால் மூலம் வாக்களிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**மகிழ்ச்சி என்பது முக்கியமே. ஆனால் 362 நாட்களும் மகிழ்ச்சியுடன் இருப்பது போன்ற துன்பம் வேறில்லை.**

**-கன்பூசியஸ்**

# இலவச மருத்துவ ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள அபயம் மருத்துவ சேவை நிலையத்தில் பெண்நோயியில் மற்றும் குழந்தைப் பாக்கியம் சிறப்பு சிகிச்சை வைத்திய நிபுணர் குருசாமி சுஜாகரன் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை 20.10.2019 அன்று பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை இலவச மருத்துவ ஆலோசனை வழங்கவுள்ளார்.

குறித்த சிகிச்சை தேவையுடையோர் வைத்திய நிபுணரிடம் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. (இ-7)

## சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III

# ஹாட்லியையிற்ஸ் 1 ம் இடம் ஜொலிஸ்ரார்ஸ் 2 ம் இடம்







சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III அணி தொடரின் இறுதிப் போட்டி கடந்த 12 ஆம் திகதி பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இவ் இறுதிப் போட்டிக்கு C.N. வித்தியாதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜொலிஸ்ரார் அணி களத் தடுப்பை தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியையிற்ஸ் அணி 23.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

றஜீவன்-10, நிரோஜன்-08, பிரசாத்-11 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் ஜொலிஸ்லரார் அணி சார்பாக வாமணன்-04, உமேஸ்-04, ஜனார்த்தனன், சோபன் தலா -01 இலக்கினை கைப்பற்றினர். 63 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி 22.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றனர். டிலக்ஸன்-09, அருண்குமார்-08, ஜனார்த்தனன்-08, சோபன்-07 ஓட்டங்களைப் பெற்றனர். களத் தடுப்பில் ஹாட்லியையிற்ஸ் அணி சார்பாக தினோஜன்-05, பிரதீப்-03, றஜீவன், சாகித்தியன் தலா 01 இலக்கினை கைப்பற்றினர். இவ் இறுதிப் போட்டியின் மூலம் சிறந்த துடுப்பாட்ட வீரராக ஹாட்லியையிற்ஸ் அணியை சார்ந்த அணித் தலைவர் J. பிரசாத்தும் சிறந்த பந்து வீச்சாளராக ஹாட்லியையிற்ஸ் அணியை சார்ந்த T.தினோஜனும் சிறந்த பந்து தடுப்பாளராக ஜொலிஸ்ரார் அணியை சார்ந்த A.ஜனார்த்தனும் போட்டியின் நாயகனாக ஹாட்லியையிற்ஸ் அணியைச் சார்ந்த T.தினோஜனும் தெரிவு செய்யப்பட்டனர். இவ்விரு அணிகளும் மாவட்டங்களுக்கு இடையில் இரண்டாவது சுற்றில் கலந்து கொள்வார்கள். இதில் தெரிவு செய்யப்படும் முதலாவது அணி மாகாண ரீதியில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சதுரங்கப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

"இலங்கை சதுரங்க சம்மேளத்தினால் நடத்தப்படும் இளையோருக்கான சதுரங்க சுற்றுப் போட்டி 2019 யாழ்.மாவட்டம் **(National Youth Chess Competition 2019-Jaffna)** இம் மாதம் 18,19,20 ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது. இப் போட்டியானது எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியளவில் ஆரம்பமாகும். போட்டியாளர்கள் சதுரங்க பலகையுடன் வருகை தர வேண்டும்.

போட்டிக்கான பதிவுகளை 17 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணி வரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் மேற்கொள்ள முடியும். அதற்கு பிந்திய பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலதிக தகவல்களுக்கு 077 343 3701 அல்லது **jdcanew@gmail.com** தொடர்பு கொள்ளவும். (க)

## அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றிய

# துணுக்காய் பிரதேச செயலக அணி



முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்திற்கான வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் அரச அதிபர் வெற்றிக் கிண்ணப் போட்டிகளில் இவ்வருடம் தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வான கயிறுழுத்தல் போட்டிகள் நடைபெற்றன.

அந்த வகையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் துணுக்காய் பிரதேச செயலக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அணி மோதியது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இக கயிறுழுத்தல் போட்டியில் துணுக்காய் பிரதேச செயலக அணி வெற்றியீட்டியிருந்தது.

இப்போட்டியில் 6 பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் பிரிவுகளிலுள்ள அனைத்து அரச திணைக்களங்களுமாக சேர்த்து 18 அணிகள் பங்குபற்றியிருந்தன.

தொடர்ந்து இடம்பெற்று வரும் அரச அதிபர் வெற்றிக்கிண்ண போட்டிகளின் ஏனைய விளையாட்டுகளிலும் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் எதிர்வரும் நாட்களில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-299)





தேசிய ரீதியில் நடைபெறவிருக்கும் கபடி போட்டிகளில் கலந்து கொள்ள இருக்கும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவராசாவினால் உதவித் தொகை வழங்கப்பட்டது. கிளிநொச்சி இந்துக் கல்லூரி மற்றும் கோணாவில் பாடசாலைகளுக்கு சென்ற கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் ஜீவராசா பாடசாலை மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு ஆசி வழங்கியதுடன் அவர்கள் குறித்த இந்தப் போட்டிகளில் வெற்றி பெற வேண்டும் என்றும் அதற்கும் அப்பால் இந்த மண்ணுக்கும் இந்த மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துத் தர வேண்டும் என்று கூறி குறித்த உதவித் தொகையை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வைத்தார். (க-28)

## ஜனாதிபதி...

குறித்த ஆணைக்குழுவில் நாளை மறுதினம் 18ஆம் திகதி முன்னிலையாகு மாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது மத்தள விமான நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பாக அவர் சாட்சியம் வழங்கவுள்ளார். (ம-3)

## மணியந்தோட்...

கொன்ஸ்ரன் கலஸ்ரன் (வயது-33) என்ற குடும்பஸ்தரே கொலை செய்யட்டுள்ளார்.

"கொழும்புத்துறை பகுதியில் உள்ள நபர் ஒருவருக்கும் உயிரிழந்தவருக்கும் இடையில் நீண்டகாலமாக மோதல் நிலை இருந்தது. நேற்று வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பாக மாறியது.

அந்த நபர் கோடரியால் குடும்பஸ்தரின் தலையில் பலமாக அடித்துள்ளார்.

தலையில் பலமாக அடிபட்டதால், சம்பவ இடத்திலேயே குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்" என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. கொலைச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,101)

## யாழ்ப்பாணம்...

குழுவொன்று, குறித்த விமானத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வருகை தந்துள்ளது.

சர்வதேச விமான நிலையத்தின் ஓடு பாதைப் பரிசோதனை, கட்டுப்பாட்டுக் கோபுரம் மற்றும் விமான நிலையத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராயவுள்ளது.

இதேவேளை நாளை 17ஆம் திகதி யாழ்ப்பாணம் விமான நிலையத் திறப்பு விழா இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்திய அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-3)

## மனித உரிமைகள்...

3ஆவது சரத்தின் பிரகாரம் மக்கள் ஆணையை வலுப்படுத்தும் வகையில் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிய வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் தேர்தல்களில், "எந்தவொரு பிரஜையும் தவிர்க்காத தேர்தலை உறுதி செய்தல்" தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு வெகுவாகக் கவனம் செலுத்தியிருக்கிறது.

அதன் பிரகாரம் அனைத்து மக்களும் தேர்தலில் கலந்துகொண்டு, வாக்களிப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிற்கு, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் தீபிகா உடகமவினால் எழுதப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## நான் எதிர்கால...

வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

யுத்தம் என்றால் காணாமல்போவது வழமை. யாழ்ப்பாண கோட்டையில் நிலைகொண்டிருந்தபோது, எனது கண்ணிற்கு முன்பாக பல இராணுவத்தினர் இறந்தனர். அவர்களையும் எம்மால் மீட்க முடியாமல் போனது என்றும் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் நேற்று கொழும்பில் பத்திரிகையாளர்களின் கேள்விகளிற்கு பதிலளித்தனர்.

இதன்போது, பத்திரிகையாளர் ஒருவர் கோத்தபாயவிடம், காணாமல் போனவர்கள் பற்றி கேள்வியெழுப்பினார்.

**கேள்வி:** இராணுவத்திடம் சரணடைந்த பொதுமக்கள் எங்கே?

**கோத்தபாய:** நான் இராணுவத்தளபதி அல்ல. இராணுவத்தளபதியிடம்தான் கேட்க வேண்டும். (சிரித்தபடி)

**கேள்வி:** இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் திரும்பி வரவில்லையே அவர்களிற்கு என்ன நடந்தது?

**கோத்தபாய:** 13784 பேர் இராணுவத்திடம் சரணடைந்தனர். அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டு வேலை வழங்கப்பட்டுள்ளது. உலகத்திலேயே எந்த நாடும் செய்திருக்காத அளவில் வெற்றிகரமான புனர்வாழ்வு திட்டத்தை நாம் மேற்கொண்டோம். வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் கூட, புனர்வாழ்வில் இருந்தவர்களை வந்து பார்த்தார்கள். நாம் அவர்களை தடுப்பில் வைத்திருக்கவில்லை. அவர்களின் கடந்த செயற்பாட்டின் அடிப்படையில், 6 மாதம், ஒரு வருடம், 2 வருடம் என புனர்வாழ்வளித்தோம். சரணடைந்தவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

**கேள்வி:** சரணடைந்தவர்கள் யாரும் காணாமல் போகவில்லையென நீங்கள் கருதுகிறீர்களா?

**கோத்தபாய:** யுத்தத்தின் போது 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் காணாமல்போயுள்ளனர். போர் என்றால் காணாமல் போவது இயல்பு. அங்கு அடையாளம் தெரியாத பல உடல்கள் இருந்தன. யாழ்ப்பாண கோட்டையில் நாங்கள் நிலைகொண்டிருந்தபோது, எங்கள் கண்ணிற்கு முன்பாகவே பலர் உயிரிழந்திருந்தனர். அவர்களை எங்களால் மீட்க முடியவில்லை.

காணாமல்போனவர்கள் என்றால், அவர்கள் உயிரிழந்திருப்பார்கள். காணாமல் போனவர்களின் உறவினர், பெற்றோர் அவர்களின் உடலை மீட்கவில்லையென்றே அர்த்தம். யுத்தத்தில் இப்படி இராணுவத்தினரும் காணாமல் போயுள்ளனர்.

நீங்கள் கேட்டீர்கள், சரணடைந்த மக்களிற்கு என்ன நடந்ததென. அவர்கள் புனர்வாழ்வு கொடுத்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

**கேள்வி:** நிறைய மக்கள் சொல்கிறார்கள், தமது உறவினர்கள் இராணுவத்திடம் சரணடைந்தனர். ஆனால் அவர்கள் நீங்கள் சொன்ன புனர்வாழ்வு பெற்றவர்கள் பட்டியலிலும் இல்லை. வீட்டிற்கும் வரவில்லை. அவர்கள் இன்னும் உயிரோடு உள்ளனரா?

**கோத்தபாய:** நாம் இது பற்றி விசாரணை நடத்தினோம். கலந்துரையாடல்கள் நடத்தினோம். இன்ன இடத்தில், இத்தனையாம் திகதி தமது உறவினர்களை சரணடைந்ததாக யாரும் சொல்லவில்லை.

**கேள்வி:** பரணகம ஆணைக்குழுவில் கூட காணாமல் போனவர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதே?

**கோத்தபாய:** இல்லை

**கேள்வி:** இல்லை அந்த ஆணைக்குழுவில் அப்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

**கோத்தபாய:** மௌனம். (ம-3)

## தெற்...

கூட்டணி ஆகிய ஐந்தும் ஒன்றிணைந்தே இனிமேல் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை மற்றும் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் தென்னிலங்கைத் தரப்புகளுடன் பேசும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸ, கோத்தபாய ராஜபக்ஷ, அநுரகுமார திஸாநாயக்க ஆகிய மூவருடனும் பேசுவோம்.

அவர்கள் இவ்விடயத்தில் எம்மைப் பேச்சுக்கு அழைக்கும்போது நாம் இப்போது மூன்று கட்சிகள் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல, ஐந்து தமிழ்க் கட்சிகளுடன் இணைந்த நிலையில் உள்ளோம்.

ஐந்து தரப்புகளும் ஒன்றுசேர்ந்தே பேச வருவோம் என அவர்களிடம் தெரிவிப்போம். அதனடிப்படையில் ஐந்து கட்சிகளும் சேர்ந்தே பேச்சுக்குச் செல்வோம் என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## ஜெனிவா தீர்...

ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர், நேற்று நடத்திய முதலாவது செய்தியாளர் சந்திப்பிலேயே, தமிழ் மக்களிற்கு அதிர்ச்சியளிக்கும் விடயங்களை தெரிவித்தார்.

"எனது தனிப்பட்ட பார்வையில், இது ஒரு சட்ட ஆவணம் அல்ல. ஆனால் எப்போதுமே நாங்கள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து எந்தவொரு பிரச்சினையையும் தீர்ப்போம்" என்றார்.

இந்த ஒப்பந்தத்தை அரசு கையெழுத்திட்ட ஆவணமாக ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஏனெனில் இந்த ஆவணத்திற்கு தனது கட்சி பகிரங்கமாக தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது என்றார்.

அத்துடன், போர்க்குற்றச்சாட்டுக்களையும் நிராகரித்தார்.

அனைத்து சமூக மக்களும் தங்கள் கௌரவத்தை பேணவும், கல்வி, வீட்டுவசதி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட சம வாய்ப்புகளை அனுபவிக்கவும் அனுமதிக்கும் ஆட்சியை ஏற்படுத்தவுள்ளதாக தெரிவித்தார். (ம-3)

## கூட்டமைப்புடன்...

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் தற்கால அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக தெரிய வருகிறது. (ம-3,10)

## ஆணையாளராக...

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பதவிக்கு சமன் ரத்நாயக்கவினை நியமிக்க அரசியலமைப்பு சபை அனுமதி வழங்கியுள்ளது. (ம-3)

## கூட்டமைப்புடன் விரை...

ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டு முதலாவது தடவையாக நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்முடன் இதுவரை பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வரவில்லை எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதேவேளை அனைத்து தரப்பினருடைய தேர்தல் விஞ்ஞாபனம் மற்றும் அவர்களது கொள்கைகள் அறிவிக்கப்பட்ட பின்னரே ஆதரவு தொடர்பாக தீர்மானிப்போம் என கூட்டமைப்பு உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர். (ம-3)

## ஆதிக்கத்துக்குட்...

பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வேறொருவரின் அதிகாரத்தின் கீழ், பிறிதொருவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு செயற்படக்கூடிய கைப்பொம்மை ஜனாதிபதி வேட்பாளர் நான் இல்லை.

இந்த நாட்டின் ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்படும் போது என்னைக் கட்டுப்படுத்தக்கூடிய, என்மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய வல்லமை சாதாரண மக்களாகிய உங்களுக்கு மாத்திரமே இருக்கின்றது.

நாட்டை ஆட்சி செய்யும் குடும்பத்தின் பிள்ளைகளுக்கு ஒரு சட்டமும், சாதாரண மக்களின் பிள்ளைகளுக்கு வேறொரு சட்டமும் இருக்க முடியாது.

அவ்வாறானதொரு யுகம் கடந்த காலங்களில் காணப்பட்டது. ஆனால் என்னை நீங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதி ஆக்கும் போது நாட்டின் ஆட்சியாளராவது நீங்களேயன்றி வேறெவரும் அல்ல என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" எனக் கூறினார். (ம-3)


நீரோகா
திகதி 2019/10/15
சீட்டிழுப்பு இலக்கம் 0611
இடபம் 16 24 52 64

செவன
திகதி 15/10/2019
சீட்டிழுப்பு இலக்கம் 227
X 06 21 37 45

மஹஜன சம்பத
திகதி 2019/10/15
சீட்டிழுப்பு இலக்கம் 4028
G 9 1 7 1 9 7

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 15-10-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2271
Q 30 35 55 74

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 762
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.10.15
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,627,885/-
வெற்றி இலக்கங்கள் 06 15 46 53 C
7842

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1612 சீட்டிழுப்பு திகதி 15/10/2019
வெற்றி இலக்கங்கள் 24 38 48 55 R
ரூ. 39,223,520

ராசி அதிர்ஷ்டம்
திகதி 15/10/2019 வெற்றி வாரம் 2648 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் மகரம் 01 29 43 59
ரூ. 2,383,070
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

கொடிபதி கப்ரக
R 05 32 42 69
35197
508 15 ஒக். 2019
இளம் சிவப்பு
அடுத்த சுப்பர் ஜக்பொட் 143, 853, 543/=

## பிரதமர் ரணில் இன்று யாழ் வருகை

# தமிழ்க் கட்சித் தலைவர்களுடன் தனித்தனியாக சந்திக்க ஏற்பாடு

## முன்னணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை தனித்தனியாக சந்தித்து பேசவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தனது நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை அறிவிக்காமல் உள்ளது. அதே வேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் உள்ள பங்காளிக்கட்சிகள் இரண்டும், தமிழ் அரசுக்கட்சியின் அண்மைய நடவடிக்கைகளால் அதிருப்தியில் உள்ளன. குறிப்பாக, ரணில் அமைச்சின் மூலம் ஒதுக்கப்படும் நிதியை ரணிலுடன் நெருங்கிச் செயற்படும் தமிழ் அரசு கட்சியினருக்கு மாத்திரமே ஒதுக்கும்படி, இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரன் தரப்பினர் ரணிலிடம் தெரிவித்தமைக்கு அமைய, ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளிற்கு பணம் ஒதுக்கப்படுவதில்லை. இதை அண்மையில் ரணிலிடம் நேரில் சுட்டிக்காட்டிய எம்.பிக்கள் சிலர், இன்னொரு சந்தர்ப்பத்தில் எமது ஆதரவு உங்களிற்கு தேவையெனில், கடந்த முறையை போல சுலபமாக கிடைக்காது என நேரில் தெரிவித்திருந்தனர்.

இந் நிலையில் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளை தனிதனியாக சந்தித்து பேசி, சமரசம் செய்ய தீர்மானித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று கட்சிகளின் தலைமைகளையும் இன்று யாழில் தனித்தனியாக சந்தித்து பேசவுள்ளார் ரணில் விக்கிரமசிங்க.

இதுதவிர, ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர்களுடனும் தொலைபேசியில் கலந்துரையாடிய ரணில் விக்கிரமசிங்க, இன்று அவர்களுடனும் நேரில் சந்தித்து பேச விருப்பம் தெரிவித்துள்ளார்.


இந்த சந்திப்புக்களில் ஜனாதிபதி தேர்தலில் ஆதரவை கோரும் ரணில், தமது எதிர்கால திட்டங்கள் குறித்து தெளிவுபடுத்துவார் என தெரிகிறது.

இதேவேளை, வடக்குடன் நன்கு பரிச்சயமான தமிழ் அதிகாரியொருவர் மூலமாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடிபிடித்தறியும் முயற்சியில் ரணில் ஈடுபட்டுள்ளார்.

முன்னணி விரும்பினால், பிரதமரை சந்தித்து அவர்களின் நிலைப்பாடு தொடர்பில் விளக்கமளிக்கலாமென அந்த தமிழ் அதிகாரி மூலமாக நேற்றிரவு தகவல் பரிமாறப்பட்டுள்ளது.

முன்னணி சம்மதித்தால் இன்றோ, நாளையோ ரணில் விக்கிரம சிங்க முன்னணியை சந்திப்பார். (ம-3)


80 ஆவது பிறந்தநாள்
என் ஆசான்
சங்கீத பூஷணம்
திரு.சு.கணபதிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர் - சங்கீதம்)
அவர்களுக்கு எங்கள் ஆத்மார்த்தமான வாழ்த்துக்கள்



பங்கயச்செல்வி முகுந்தன் குடும்பம்
மூளாய். (இசை ஆசிரியை - வட்டு இந்துக்கல்லூரி)
(C-7936)

3-6 மாத அலுவலக பயிற்சிகள்
பயிற்சியின் பின்னர் வேலை வாய்ப்புக்கள்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மருதங்கேணி
● எமது அனைத்து கிளைகளிலும் 3-6 மாத கால வேலை வாய்ப்பு பயற்சிகள் உண்டு.
● பயிற்சிகால ஊக்கத்தொகை -10'000/-
● பயிற்சியின் பின்னர் -15'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com
(C-7539)

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை
எமது இலத்திரனியல் நிறுவனத்தின் கிளைகளுக்கு புதிதாக ஆண், பெண் இருபாலரையும் இணைக்க உள்ளோம். O/L மற்றும் A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். நாளாந்தம் 750/= - 1500/= வரை பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு முந்துங்கள்
076 939 3965 / 077 985 6671
(663)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(659)

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் எமரல்ட் ஐல் ஊடாக...
றோமானியா வேலைவாய்ப்பு
மேசன், மெக்கானிக் கட்டட தச்சுவேலையாள் றைல் ஃபிற்றர், சமையலாளர் களஞ்சியசாலை பணியாளர்
உணவு, தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் வழங்கப்படும்
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
077 00 38 215
077 55 46 956
021 221 9 221
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lovers/Teen Girlsக்கு அருகே)
License No. 2268 www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk
(C-7934)

இந்திய விபூதி விற்பனைக்கு
எம்மிடம் இருந்து இந்திய விபூதி 1 Kg பக்கற்றினை மொத்தமாக (Rs.100) இற்கும் சில்லறையாக (Rs.110) இற்கும் பெற்றுக் கொள்ளலாம்.
அத்துடன் விபூதி, சந்தனம், குங்குமம், 25g பக்கற் முதல் 1 Kg பக்கற் வரை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
(C-7909)
தொடர்புகளுக்கு:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமையில்) தொ.பேசி: 0212222567

விற்பனைக்கு
சில மாதங்கள் பாவிக்கப்பட்ட சீற் (கூரைத்தகடுகள்) கன்வஸ் மரங்கள், கொங்கிறீட் தூண்கள், கோழிக் கூட்டு நெற், ஓட்டமெற்றிக் தண்ணீர்க்கான்கள், சாப்பாட்டுத் தட்டுகள் என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : 076 232 6951
(664)

வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை
(C-7910)

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932,
021 223 2222 (உரும்பிராய்)
(C-7928)

அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் 02-10-2019 தொடக்கம் 05-11-2019 வரை
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 | 0764550673 |
| மானிப்பாய் | சுன்னாகம் | கொடிகாமம் | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை | மருதங்கேணி |
| 0768226238 | 0764550670 | 0764550675 | 0768226230 | 0776697960 | 0764550671 |

(C-7906)
V2 Travels www.facebook.com/v2tandt

Study in ITALY
Full Scholarship
ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு
Admission open for 2020 intake
Why Study in ITALY ?



★ Bachelors & Master Degree
★ Study in English Medium
★ கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
★ கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
★ 100% விசா உத்தரவாதம்.
★ குறைந்த பாட நெறி கட்டணம்
★ Dependent visa to spouse
★ Schengen visa
Limited Seats Available
(C-7879)
iCS Study Abroad
Admissions :- 077 301 3060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்) 021 492 6222
107 B 1/1 . Galle Road . Colombo 6

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK – 550 /=Kg
கனடா – 950 /=Kg
ஜேர்மனி – 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
V2 TRAVELS
(C-7539)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.